

# "BACK TO THE LAND"

OR

# சீரைத்தேடின் ஏரைத்தேடு

இஃது

அரியலூர்

அக்ரிகல்சரல் டிமான்ஸ்ட்ரேடர்

S மகாதேவ அய்யர் B. Sc. (Ag.)

இயற்றியது.

ஜனோபகார பிராஞ்சு: அச்சுக்கூடம்,

அரியலூர்.

1934

ரிஜிஸ்தர் செய்தது]

## நாடகப் பாத்திரங்கள்.

| நே. | பெயர். | பாத்திரம். |
|---|---|---|
| 1 | தனபாலன் | மிராசுதார் |
| 2 | ரெங்கராஜன் | பட்டாமணியாரார் மகன் |
| 3 | சடையன் | குடியானவர்கள் |
| 4 | பொன்னன் | |
| 5 | வேலுசாமி கவுண்டர் 1வது ரயத்து | |
| 6 | ரெங்கசாமி ரெட்டியார் 2வது ,, | |
| 7 | அழகப் படையாச்சி 3வது ,, | |
| 8 | வேணுநாய்க்கன் | |
| 9 | முருகன் | தனபாலன் வேலையாள் |
| 10 | சுலோசனு | தனபாலன் மனைவி |
| 11 | ராஜி | மாதர் சங்க மெம்பர்கள் |
| 12 | தனம் | |
| 13 | கமலம் | |
| 14 | ராதா | |

டெபுடி டைரெக்டர், விவசாய டிமான்ஸ்ட்ரேடர், கிராமமுனிசீபு பூசாரி, கம்பளத்தான், மெசஞ்சர், தலையாரி, மற்றும் சிலர்.

நிகழுமிடம்—புதுப்பாளையத்திலும், பட்டணத்திம்.



S. V. Ramamurthy, M. A., I. C. S.,

*Director of Agriculture, Madras.*

The idea of presenting agricultural improvements
to the public, in the form of a drama,
was first suggested by

Mr. S. V. Ramamurthy,

*Director of Agriculture.*

THIS

# AGRICULTURAL DRAMA

IS

DEDICATED

(BY PERMISSION)

TO



*M. R. Ry. Rao Saheb*

## *N. S. Kulandaiswamy Pillai Avergal*

*Deputy Director of Agriculture*

*Trichinopoly*

(as a mark of sincere respect for his innate generosity and unstinted patronage)

BY

THE AUTHOR

# FOREWORD

## (I) Sir T. DESIKACHARI Kt.

ADVOCATE
TRICHINOPOLY.

---

In these days when problems of agriculture are engaging the attention of those interested in the welfare of our country, it is essential to remind peasant proprietors to the necessity of bestowing direct and personal care to the cultivation of land. They are often attracted to urban areas and there, instead of maintaining the basic industry, of the country, spend more than what is earned from the rent paid by cultivating tenants. In this and other ways many opulent and prominent families have gone to ruin.

The Drama written by Mr. S. Mahadeva Ayyar Agricultural Demonstrator of Ariyalur, depicts vividly and forcibly this deplorable state of affairs. I was present when the first scene was enacted at the end of the Agricultural Conference in Srirangam, and I was struck with the pains taken by the author to inculcate the moral of the play and exemplify it in simple language. I have no doubt that if in Schools and Colleges this little drama be enacted, it must focus public attention to the necessity for greater interest being taken in lands, than in mere literary education, which, in these days, spells but unemployment. I commend this little book of Mr. Mahadeva Ayyar alike to educational authorities and landed proprietors and trust that the author's purpose will be achieved by their sympathy and support.

*T. Desikachari*

(II) RAO SAHEB

# G. RAJAGOPAL PILLAI F. R. H. S.

BIKSHANDARKOVIL

PRSIDENT DISTRICT AGRICULTURAL ASSOCIATION

TRICHINOPOLY.

---

I had the pleasure of attending this Drama staged on 3-1-1934 by young students, during the Exhibition week at Srirangam. It was of absorbing interest, and proved a powerful appeal to the public to go "back to the land". The truth "ஒதுவாரெல்லாம் உழுவார்தந் தலைக்கடைக்கே" is embodied in the story. The plot is new and original quite in keeping with the modern times of economic depression wherein the Agriculturists are the most hard hit.

Enterprises in such fields have not beeu attempted at till now, and I earnestly wish that similar plays are written, as they form the best means of Education to the masses as well as a lesson to the rising generation. The Author of the play and the pupils of Ariyalur School, who staged it so very successfully, are heartily congradulated for the new impetus they have given.

*G. Rajagopal Pillai.*

(III) RAO BAHADUR

# T. M. NARAYANASWAMY PILLAI

M. A., B. L., M. L. C.,

PUBLIC PROSECUTOR, AND PRESIDENT DISTRICT BOARD

TRICHINOPOLY.

---

The Drama "BACK TO THE LAND" written by Mr S. Mahadeva Aiyar Agricultural Demonstrator Ariyalur is an excellent one. It is conceived in the best interests of our Agricultural population, who are at present neglecting their lands and migrating into towns where they fall an easy prey to vicious and extravagant habits. The play has a special significance at the present time when the income from the lands has to be increased by the adoption of better methods and more remunerative crops. During last January the play was staged by the boys of the District Board High School Ariyalur, and their performance has earned the approbation of one and all. I have great pleasure in congradulating the author on the production of this excellent play. I have no doubt it will have high educative value if introduced into schools and Colleges. I congradulate the boys also on their excellent performance.

T. M. Narayonaswamy Pillai.

(IV) RAO SAHIB

**K. E. CHIDAMBARA AYYAR** B. A,

RETIRED COLLECTOR & VICE-PRESIDENT,

DISTRICT AGRICULTURAL ASSOCIATION TRICHINOPOLY

---

It is with great pleasure that I witnessed the drama played by the young boys of the Ariyalur High School at the Agricultural Exibition pandal at Srirangam on 3rd January 1934 The young actors played so well that it reflected great credit not only on them, but also on the gentlemen who coached them up and prepared them so successfully, for the stage for the first time. The highest credit goes to Mr. S. Mahadeva Ayyar, Agricultural Demonstrator, Ariyalur, who conceived the plot of the drama and composed it so beautifully as to expose the modern futile tendency of the middle class agriculturists to migrate from villages to enjoy the amenities of town life, much to the detriment of their ancient industry of agriculture, and to teach the imperative necessity of such town dwellers to go back to their lands.

He has set forth in simple colloquial language of the ryots, easily understood and appreciated by them, the improved methods of agriculture, and the manner in which a sympathetic agricultural demonstrator can successfully introduce them amongst the conservative ryots. In writing the drama the author has shown his high capacity not only for close and correct observation of what he has seen of village-life and of the habits and mannerisms of villagers but also for faithful delineation of what he has seen The drama is instructive and useful not only to villagers but also to the subordinates of the Agricultural Department who have to deal with the conservative ryots with tact and sympathy I am inclined to think that by such literature and by such tactful and intelligent demonstrators the scientific method of agriculture can be propagated in villages.

*K. E. Chidambara Ayyar.*

## FREFACE.

The importance of "Drama" as a means of propoganda, for accelerating the spread of agricultural improvements need hardly be stressed.

That "agriculture is a gamble with season" is often the thought that deflects many of us from taking it up as a profession. Little knowing the latent possibilities in sticking on to the land, and conjuring up visions of prosperity, we often seek the city life, in search of other walks of life. But most of the other professions other than agriculture, involve a career of speculations The life is full of duplicity, and we deviate into an act of justice, only when our interests lie in that direction. In spite of all these, attainment of true happiness remains only an aspiration and not a realization. Whereas in agriculture merit and meed go together. The drama is an appeal to go back to the land and take up agriculture.

The preparation of this drama was first under-taken since the Director of Agriculture (Mr. S. V. Ramamurthy I. C. S.) wanted that the Departmental officers should attempt at writing short dramas to draw the attention of the villagers to agricultural improvements by means of songs and drama. Later when rehearsals were conducted with a view to stage the drama at Sreerangam, considerable changes were made, in the plot, in the light of the experience obtained in the course of the rehearsals. This is natural since this is the first time that the departmental work is presented to the public in the form of a drama.

This drama could not have been what it is, but for the suggestions, improvements, and general guidance I received in the course of the composition from M. R. Ry.

N. S. Kulandaiswamy Pillai Avergal, Deputy Director of Agriculture, and I have dedicated this to him, as a mark of sincere respect, for his innate generosity and love.

The songs in the drama were specially composed for the play. I am responsible only for the matter herein, and the songs were prepared by Mr. N. Krishnaswamy Iyyangar Scout Master of Ariyalur Board High School, and Mr. A. Methusulah of Board Girls' School Ariyalur. I am deeply indebted to them for this help rendered.

With the kind permission of Rao Bahadur T. M. Narayanaswamy Pillai President District Board Trichinopoly, a batch of students of Ariyalur Board High School, were trained (by Mr. N. Krishnaswamy Iyyangar, Scout Master and Mr. M Thiruvengadam Pillai Head master of the school) to enact the play at Sreerangam, during the Agricultural and Industrial Exhibition conducted by the Trichinopoly District Agricultural Association at the time of Vaikunta Ekadasi Festival The drama was sucessfully staged before the public on 3—1—1934, under the auspices of Lalgudy Sivagnanam Agricultural society and before the immediate presence of Mrs. Cobbald wife of the District Collector Trichinopoly, and the Exhibition Committee consisting of Messrs E. B. Cobbald District Collector Trichinopoly, Sir. T Desikachariar Avergal, G. Rajagopal Pillai F. R H. S. President District Agricultural Association, and others.

The play was very much appreciated, and the printing of the same, in book form, was under-taken, at the request of the public, as it was considered to be of high educative value to the masses.

**S. MAHADEVAN**

*Author.*

OFFICE OF THE DIRECTOR OF AGRICULTURE
MADRAS

*Dated the 27th June 1934*

# CERTIFICATE.

This is to certify that the Tamil drama "*Back to the land*" written by M. R. Ry. S. Mahadeva Ayyar, Agricultural Demonstrator Ariyalur, in competition for the gold medal awarded by the Government of Madras, has been treated as **"Honourably mentioned"**

K. Gopalakrishna Raju,

25—6—34

for Director of Agriculture.

**Agricultural Drama—"BACK TO THE LAND"**

*Staged by the Students of Ariyalur Board High School—January 1934*



# Personnel in the group.

Sitting in chairs (from the left)

1st M. R. Ry. N. Krishnaswamy Iyyangar,
*Scout-Master.*

2nd ,, Rao Saheb G. Rajgopal Pillai, F.R.H S.
*President District Agricultural Association.*

3rd ,, M. Thiruvengadam, Pillai, B.A., L.T.,
*Head Master.*

9th ,, S. Mahadevan,
*Agricultural Demonstrator.*

10th ,, Rao Saheb N. S. Kulandaiswamy Pillai
*Deputy Director of Agriculture*

Rest of the group are students.

# கதைச் சுருக்கம்.

புதுப்பாளையம் கிராமத்துப் பெரியபண்ணை மிராசுதார் "தன பாலன்" தன் மனைவி சொற்கிணங்க, நிலபலங்களை ஒரு ஏஜண்டின் மேல்பார்வையில் ஒப்பிவித்துவிட்டு, குடும்பத்துடன் நகரவாசத்திற்கு செல்லுகிகிறான். அவர்களுடன், 'முருகன்' என்னும் ஒரு நம்பிக்கையுள்ள பண்ணையாளும் போகிறான்.

ஒரு நாள் அந்தக் கிராமக் குடியானவர்கள், தங்களுக்குள்ள கஷ்ட நஷ்டங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது, விவசாய டிமான்ஸ்ட்ரேடர் ஒருவர், வந்து, அவர்களுக்கு நவீன விவசாய முறைகளை எடுத்து சொல்லி, அவைகளை ரயத்துக்கள் செய்துபார்க்க, வேண்டிய உதவிகளும் செய்கிறார். நாளடைவில், அந்த கிராமத்தில் அநேகம் ரயத்துக்கள், டிபார்ட்மெண்டு முறைகளை மேற்கொண்டு முன்னேற்றமடைகிறார்கள்.

நகரத்தில், தனபாலன் தனது ஜீவிய ரீதியை ஜாஸ்தி பண்ணிக் கொண்டு, பலவித நஷ்டங்களுக்குள்ளாகி வருந்துகிறான். முருகனை, கிராமத்திற்கனுப்பி, அவன் மூலமாக, டிபார்ட்மெண்டார் செய்யும் வேலைகளையும், ஏஜண்டின் கவனக்குறைவினால் தனக்கு வந்த நஷ்டங்களையும் அறிந்துகொள்ளுகிறான். தனது உண்மை நிலை, அறியாமல், நகரவாழ்க்கையின் சுகங்களில் ஈடுபட்டிருந்த, சுலோசனை, தன் புருஷனுக்கும் முருகனுக்கும் நடந்த, மேற்சொன்ன சம்பாஷணையை ஒற்றுக்கேட்டுக்கொண்டிருக்கிறாள். தன்னுடைய புத்தியீனத்திற்காக தன்னை வெறுத்துக்கொண்டு புருஷனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுமல்லாமல், மறுபடியும், கிராமத்திற்கு போகவேண்டுகிறாள்.

எல்லோரும் கிராமத்திற்கு, வந்து விவசாயத்தை மேற்கொண்டு, நல்ல ஸ்திதியை யடைகிறார்கள் என்பதுடன் காட்சி முடிகிறது.

# Back to the Land.

## களம் 1. அங்கம் 1.

இடம் :—புதுப்பாளையம், மிராசுதார் தனபாலன் வீடு.
காலம் :—மாலை 3 மணி.
பாத்திரம் :—தனபாலன், சுலோசனா, முருகன்.

[தனபாலன் வருகிறான்]

தன வ:—(தனக்குள்) "மண்ணை நம்பினாலும், மன்னனை நம்பினாலும் வீண் போகாது" என்பது மெய்யே. ஆனால் வேளாண்மையில் பூராவும் ஈடு பட்டவனுக்கு, கொஞ்ச நேரமும் ஒழிவு இருப்பதில்லை 'பாடுபட்டவனுக்கே விவசாயம்" ஆகையால் மிராசுதாரரானாலும், சாதாரணக் குடியானவனானாலும், "வரப்பே தலைகாணி, வைக் கோலே பஞ்சு மெத்தை" என்று கருதி, உழைக்கவேண் டியிருக்கிறது. இப்பொழுது மணி 3 அடித்துவிட்டது. நிலங்களை சுற்றிப்பார்த்து நான் காலையில் இட்ட வேலையை பண்ணையாட்கள் சரிவர செய்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும்.

சுலோசனா! சுலோசனா!! காப்பி கொண்டுவா.

[சுலோசனா காபியும், ஒருதட்டில் பலகாரமும் கொண்டுவருகிறாள்]

சுலோ வ:—(ஒருபுறமாய் தனக்குள்) இப்பொழுது என் புருஷர் சாவகாசமாய் இருக்கிறார்போல் காண்கிறது, ஆகையால் நான் நினைத்த காரியத்தை இன்றைக்கே சாதித்துக் கொள்ளவேண்டும்.

[தனபாலன் காபியை சாப்பிட்டுக்கொண்டு]

தன வ:—என்ன காபி இது! வெந்நீர் மாதிரி இருக்கு, சர்க் கரை காணாது,

சுலோ வ:—(மூகத்தை சுளித்து) ஆமாம்! நீங்க என்னை வச்சிருக் கிற அழகுக்கு இந்த காபி போதாதாக்கும்.

தன வ:—என்ன இன்னிக்கி கோபம் உனக்கு?

சுலோ வ:—கோபம் என்ன கோபம்:

பாட்டு. இராகம் : தர்பார்—ரூபகம்,

மாலையிட்ட நாள்முதலாய் மாடுபோலுழைத்த தல்லால்
நாலுபேரைப்போலே சுகம் நானடைந்ததுண்டோ சொல்லும்

சு வ:—ஏன் அவசியமில்லே! நம்முடைய பையனுக்கு மேல் வாசிக்க காலேஜில் சேரவேண்டும். கீழ்க்கோர்ட்டில் நடந்த வியாஜ்ஜியம், நமக்கு விரோதமாகிவிட்டது. ஹைக்கோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டும். இந்த வருஷமாவது பெண்ணுக்கு அவசியம் கலியாணம் ஆக ணும், பட்டணத்தில் இருந்தால் பிள்ளே பார்க்க சௌகரி யமாயிருக்கும்.

தன வ:—இவைகளுக்காக நாம் ஏன் போகவேண்டும். கேஸை வக்கில் வைத்து நடத்தலாம் பையன் காலேஜில் சேர்ந்து படிக்கட்டும். லீவு நாட்களுக்கு இவ்விடம் வந்து விடுகிறுன்.

சு வ:—அது அவ்வளவு சௌகரியப்படாது வக்கீல்களே நம்ப முடியாது. நாம் நேரில் போய் அங்கே வேண்டிய பிரயத்தனம் செய்தால்தான் கேஸ் ஜெயிக்கும். நான் பையனேவிட்டுப் பிரிந்திருக்கமுடியாது.

தன வ:—நாம் பட்டணம் போவதானுல் நம் நிலங்களே யார் பார்த் துக்கொள்வது.

சு வ:—அதற்கென்ன ஒரு ஏஜண்டை வைத்துவிட்டால் பிறகு நிலங்களேப்பற்றி நமக்கு ஒரு கவலேயும் வேண்டாம்.

தன வ:—சரி! அப்படியே செய்வோம். எப்பொழுது புறப்பட லாம்.

சு வ:—ஏன்! இந்த மாதக் கடைசியில் புறப்படலாமே.

தன வ:—போகும்பொழுது ஒரு நம்பிக்கையுள்ள ஆள் அவசிய மாகையால் நமது முருகனேயும் கூட்டிக்கொண்டு போக லாம். முருகனும் வரும் சமயம்.

(முருகன் வருகிறுன்)

மு வ:—ஸ்வாமி!

தன வ:—முருகா! நம்முடைய கேஸ் தோற்றுப்போய்விட்டதால் மேல் கோர்ட்டில் அப்பீல் செய்யவேண்டும். பையனும் காலேஜில் படிக்கவேண்டியிருப்பதால், நம், நிலபலங் களேப்பார்க்க ஒரு ஏஜண்டை வைத்துவிட்டு நான் அம்மா குழந்தைகளுடன் சிலகாலம் பட்டண்ம் போயிருந்து வரலாமென்று யோஜிக்கிறேன்.

மு வ:—எஜமான்களே! வேண்டாம். வீணுய்ப்போயிடும் "உடையவன் கால் தூசிதான் நிலத்துக்கு நல்ல உறம்'ரி ஆகையால் நீங்க இங்கே இருந்து பாக்கிற மாதி'

அதெல்லாம் வராதுங்க. நான் இந்தப் பண்ணையிலே சிறுபுள்ளேமுதல்ல வேலே பாக்குரேங்க. எசமாங்க தகப்பனர், பாட்டனர் எல்லாம் இந்த கிராமத்தோடே இருந்ததால்தான் இவ்வளவு சொத்தும் சேர்ந்துதுங்க.

சு வ:—முருகா! நாங்கள் இதெல்லாம் யோஜனேபண்ணிதான் ஒருமுடிவிற்கு வந்திருக்கிறோம்.

மு வ:—அம்மா! கொஞ்சம் கேக்கணும், இப்பொவே, வெலெ வாசியெல்லாம் ரொம்ப குரஞ்சுபோச்சு. ஒரு ஏஜண்டையும் வச்சு அவன் நிலபலத்தை சரிவர பாக்குலேண்ணு ஒண்ணு பாதி மாசூல் கூட வராதுங்க.

சு வ:—அதுக்கென்ன! நல்ல ஏஜண்டாய் வைத்துவிட்டால் அவன் சரியாய் பார்த்துக்கிரான்.

மு வ:—அப்போ! உங்கள் இஷ்டம். நான் அதுக்கு மேலே என்ன சொல்லுரதுங்க

த வ:—முருகா! இந்த மாசக்கடைசியில் புறப்படவேண்டியிருக்கும் நீயும் கூடவரத் தயாராயிருக்கவேண்டும்.

மு வ:—எஜமான் சொல்ரப்போ எனக்கென்ன.

(போகிறார்கள்)

---

## களம் 1. அங்கம் 2.

இடம்:—புதுப்பாளையம் குடியானவன் வீடு.
காலம்:—காலே 6 மணி,
பாத்திரம்:—சடையன், கருப்பாயி, பொன்னன்.

(சடையன் தன் வீட்டின்முன் நின்றுகொண்டு)

ச வ:—தைமாசம் பொரந்தும் இந்த நடுக்கம் நடுக்குது இன்னம் பனிபோவலே. (மடியைப்பார்த்துவிட்டு) ரெண்டு சருவுகூட இல்லே போட்டுக்க,

(பொன்னன் கூடை மண்வெட்டியுடன் வருகிறான்)

ச வ:—வா! அண்ணே!

பொ வ:—வாரேன்.

ச வ:—குந்தே போவலாம், என்ன இவ்வளவு கருக்கலோடே கிளம்புட்டே.

பொ வ:—போவணும் தம்பி! அந்தக் களரங்காட்டு மோட்டே கொஞ்சம் திருத்தலாம்ணு பாக்குறேன்.

ச வ:—சருவு கொஞ்சம் குடு, ஆமாம்.........................

ச பா. தர்மபசுவை—என்றமெட்டு.

அண்ணு! உன் கொல்லே களை வெட்டி ஆச்சா
முன்னுலே விதைத்த விதை முளைத்திடலாச்சா

ச வ:—எனக்கு முந்தியே உன் கொல்லேயெல்லாம் வெதச்சுப் புட்டியே, களே வெட்டிப்புட்டியா,

போ வ:—அந்த வவுத்தெரிச்சலே ஏன் மூட்டுரே!

போ பாட்டு: ஷை மெட்டு.

1. தம்பியே யெனக்கு இன்னும் காணிக்குமேலே
தவக்கமானதே கூலியாள் கிடைக்காததாலே,
2. என்ன களே வெட்டியெரு போட்டாலுமே
ஏதும் பலன் இல்லே பாடு பட்டாலுமே

பொ வ:—என்னமோ தம்பீ! களேயெத்தா வெட்டினே, எரு வெத்தா போட்டேன். கூலியாள் கிடைக்காததாலே ஒரு காணியை சும்மா போட்டுட்டேன். என்ன செஞ் சும் குடிக்க கூழுக்குக்கூட விதியில்லே, அந்த மருத வீரன் கண்திறந்து பாத்தால்லே உண்டு.

ச வ:—என்ன! உன் மொவத்துலே களேயேயில்லே சோந்தாப் பலே பேசுரே

போ வ:—மொவத்துலே களே இல்லாட்டியும் காட்டிலே களேக்கு கொரச்சலில்லே. ஏண்ணே! சொல்ரேன் கேளு.

போ பாட்டு: ஷை மெட்டு.

கடலேயிலே விழுந்த பூச்சி கணக்கெட்டவில்லே
கண்டபடி தின்னதில்இ லே கூட இல்லே

போ வ:—கடலேயிலே என்னமோ பூச்சிவிழுந்து கொடியெல்லாம் தின்னுபுடுச்சு, இலேகூட இல்லே, எவ்வளவோ புடுச்சுப் பாத்தேன் ஒண்ணும் வாய்க்கலே.

ச வ:—ஆமாம்! என் கொல்லேயில்கூட.................

போ வ:—இன்னும் சொல்லரேன் கேளு.

போ பாட்டு: ஷை மெட்டு

சோளம் மணி பிடிக்காமலே சோர்ந்திடலாச்சு
தொட்டுப்பாத்தேன் கையெல்லாங் கருப்பாகப்போச்சு

போ  வ.—சோளத்திலேகூட கதிரெல்லாம் கருப்பாயிருக்கு மணி புடிக்கவே இல்லே தொட்டா கருப்பு பொடியாவருது, இந்த வருசம் அந்த கம்பும், கேவுரும் கொஞ்சம் தேவுலே, இல்லாட்டி, ஏம் பாடு ரொம்ப மோசந்தான்.

ச  வ:—ஏன் பாட்டையும் கொஞ்சம் சொல்ரேன் கேளேன்.

### ஷ மெட்டு

1. உழுது எருப்போட்டேனந்த விளாங்காட்டிலே
ஒன்றும் பயிர் பிடிக்கவில்லை யிருக்கேன்ஊட்டுலே
2 நெல்லு பயிரை நினைத்தால் நடுங்குதேமனம்
சொல்லுகிறேன் யெத்தெரிச்சல் கொஞ்சமோ பணம்
3. செலவழித்துக் கிணத்துத்தண்ணீர் சேந்தியேவிட்டேன்
வெலவெலத்துப் போச்சு பயிர் வேலையுங்கெட்டேன்

ச  வ:—நம்ப விளாங்காடு இருக்குப்பாரு ..............

போ  வ:—ஆமாம்!

ச  வ:—அதிலே! நானும் எவ்வளவோ எருப்போட்டு செய்னேத்தி பண்ணரேன் பயிரே புடிக்கமாட்டேங்குது. இருந்த பணத்தே போட்டு நெல்லு வெதச்சு கெணத்து தண்ணி பாச்சினேன் பயிர் வெலவெலத்துப் போச்சு செவனேண்ணு ஊடடுலே குந்திட்டேன். அந்த வாழையும், கொடிக்காலும், ஏதோ நல்லாயிருக்கு.

போ  வ:—நீ கொளத்துத் தண்ணி பாச்சணும், ஏதாச்சும் பயிர் புடிக்கும். ஆனு! நீ யென்ன பண்ணுவே பாவம்; கொளத்துலே, தண்ணிதான் இல்லியே.

ச  வ:—நம்ப பாடுமட்டும் தான் இப்படி இருக்குண்ணு நெனச்சுக்கிட்டியா.

ச  பாட்டு:

### ஷ மெட்டு

1. சாமியார் முந்திரித்தோட்டம் சாம்பலாய்ப் போச்சு
சார்ந்த வெண்டை பிஞ்சுதரை தனில்விழலாச்சு
2. பெரிய பண்ணேகரும்பைப்பற்றி பேசவேவேண்டாம்
போனமூலே தெரியவில்லே பொசுக்கிடல் நன்றும்
3. கரும்பினில் கணுக்கவெல்லாம் செவப்பாயிருக்குது
காணவில்லே பூச்சியேதும் வியப்பாயிருக்குது.

ச  வ:—சாமியார் முந்திரித்தோட்டத்தில் சாம்பல் நோய் மாதிரி வந்திருக்கு. வெண்டைச் செடியிலும் இருக்கு காயெல்லாம் உதுந்துபோவுது. பெரியபண்ணே கரும்புலே அங்கே இங்கே பட்டுப்போவுது. கணுக்களெல்லாம் செவப்பாயிருக்குது. உள்ளே பூச்சி ஒண்ணேயும் காணும்

(கருப்பாயி குடத்துடன் வருகிருள்)

க வ:—விடிஞ்சு எந்திரிச்சா வெளியிலேபோயி வேலே வெட்டியே பாக்காமே, வம்பு பேசிக்கிட்டு, குந்தி இருக்கிங்களே பெரியபண்ணே பயிரு எப்படிப்போனு ஒங்களுக்கு என்ன? அவுங்க மவராசங்க என்ன வந்தாலும் தாங்கும். நம்ம காட்டுலே பயிர் பாழாவுதே அதே போயிபாக்கணும்னு இல்லாமே.........................
ஏன்! பொன்னுசாமி அண்ணே நீதான் சொல்லேன்.

ச வ:—ஆமாம்! கிளிஞ்சுது போய்பாத்து என்னபண்ணுரது அதைப்பத்திதான் பேசிக்கொண்டு இருக்கோம்

க வ:—வழியிலே வேலேக்கு போரவங்களேயும் மறிச்சுவச்சுக்கிட்டு பேசிக்கிட்டு இருந்தா எல்லா வேலேயும் ஆயிப் போவும்.

க பாட்டு: கொச்சிமலே—என்ற மெட்டு,

பேசிப் பேசிக்குந்திருந்தா — பொழுதுதானே போகும் (அண்ணு
பொழுதுதானே போகும்.
கூசிக் கூசி வேலே செய்தால் — கூடிவரும் நாசம்

க வ:—ஏன் அண்ணே! நான் சொல்லரது தெரியுதா

போ வ:—நீ நல்லாத்தான் சொல்லுரே அதுக்கு என்னபண்ணுரது.

க பாட்டு: ஷை மெட்டு

1. கையிலொரு காசுமில்லே — கடன் கொடுப்பார் யாருமில்லே
கடன் கொடுப்பார் யாருமில்லே
வையகத்தில் நாம் பிழைக்க — வழியும் தெரியவில்லேயே
2. உப்புமிலலே பருப்புமில்லே — ஒருபடி தானியமுமில்லே
ஒருபடி தானியமுமில்லே
இப்படி நேரங்கழிந்தால் — ஏன் வராது தொல்லே.

க வ:—உப்பா புளியா ஒண்ணும் இல்லே ஊட்டுலே, தோப்புப் பக்கம் போயி ஏதாச்சும் மாங்கா, தேங்கா, பரிச்சாந்தா அதே நான் சந்தையிலே போயி வித்துபுட்டு ஏதாச்சும் வாங்கியாந்து தொலேப்பேனு யில்லியா!

ச வ:—தோப்புலே என்னு இருக்கு இந்த வருசம் மாத்துலே பாதிக்கிமேலே பூவெல்லாம் உதுந்து போச்சு உள்ளே போனு என்னமோ பூச்சி பரக்குது. கண்ணெமே தொரக்க உடுல்லே. தென்னந்தோப்புலேயும் அதே கதைதான் மரத்துலே இருந்து சலம் வடியுது, இந்த மரங்கள்ளே காப்பு இல்லே. பத்தும் பத்தாத்துக்கு

"தானிருக்கிற நேத்தியிலே தடவிக்கிட்டாளாம் வேப் பெண்ணெயே" ங்கிரமாதிரி, சுத்தி இருந்த சப்பாத்தி யெல்லாம் பூச்சி அரிச்சி புடுச்சு இந்த வருசம் வேலி வைக்க வேறே பணம் வேணும்.

போ வ:—ஏன் தம்பி! போன வருசம் பாங்காபீசுலே 300 ரூ. கடன் வாங்கினியே அதே யென்னபண்ணுனே.

ச வ:—அந்தக் கணக்கை சொல்ரேன் கேளு.

ச பாட்டு: தேரே நாமேமுகம்மது—என்றமெட்டு.

செட்டிக்கடனுக்கு வட்டி கொடுத்ததில்
சென்றது நூறு ரூபாய்
அட்டியின்றி அதை கொடாவிட்டால் கோட்டில்
மாட்டிடுவான் பாராய்

ச வ.—செட்டி கடனுக்கு வட்டி கொடுக்காட்டி கோட்டுலே போட்டுடுவாண்ணு பயந்து அவனுக்கு ரூ. 100 கொடுத்தேன்

போ வ:—அப்புரம் பாக்கி ரூபாய்

ச பாட்டு: ஷை மெட்டு

மூத்த மகளுக்குக் கலியாணம் செய்யமு
டிந்தது பாக்கி யெல்லாம்
காத்திருந்த மாப்பி ளேதவரி விட்டா
பாத்தோர்க்குப் பழிச் சொல்லாம்

ச வ:—வந்த மாப்பிள்ளையை விட்டுட்டா அப்புரம் பெண்ணு வளந்துடுவா மனுசி ஆயிட்டா நாலுபேரு நாலு சொல்லுவாங்க.

போ வ:—அதெல்லாம் சரிதான் இதுக்கு சருக்காருலே ஒண்ணும் பண்ணமாட்டாங்களா? அவுங்க ஆசுபத்திரி கோடு, பள்ளிக்கூடம், லயிலு, டாணுக்காரன் இதெல்லாம் வச்சு குடிகளேக் காப்பாத்துராங்களே இதுக்கு ஒண் ணும் செய்யமாட்டாங்களா!

ச வ:—அடே! போடா! இதுக்கு அவுங்க என்னபண்ணு வாங்க மனுசனுக்கு விசாதிவந்தா மருந்து உண்டு. இதுக்கெல்லாம் மருந்து கெடயாதுடா.

க பாட்டு: ஷை மெட்டு.

வெட்டிப் பேச்சுப் பேசி காலத்தை நேரத்தை
வீணுக்கவா நிற்கிறீா

சட்டென்றெழுந்திரா | விட்டால் சாணித்தண்ணி
தான் தெளிப்பேன் | பார்க்குரீர்

க வ:—நேரமாவுது இன்னும் ஒருவேலையுமாவலே நம்ம கஷ்டத்துக்கு சருக்காரிலே என்ன பண்ணப்போராங்க, போய் பண்டாரத்தை கூட்டியாந்து காளியாயிக்குப் பூசை போட்டு உடுக்கு அடிச்சுக் கேட்டா சாமி சொல்லுது வளியே........

போ வ:—அதான் சரி! உன் ஊட்டுக்காரி சொல்லரது நல்ல ரோசனே அந்த முத்துப்பண்டாரத்தைப் போயி கேக்கலாமா.

ச வ:— அவன் குறி அவ்வளவு சரியா சொல்ரது இல்லே. நம்ப வள்ளுவபண்டாரத்தை கூட்டியாரலாம்! வா போவலாம்.
(போகிருர்கள்.)

---

## கலம் 1. அங்கம் 3.

இடம்:—காளிகோவில்
காலம்:—இரவு 9 மணி
பாத்திரம்:—பொன்னன், குடி ஜனங்கள், பூசாரி. காளிக்குப் பூஜை செய்து, நிவேதனம் படைத்து விட்டுப் பூசாரி வேண்டிக்கொள்ளுகிருன்.

பூசாரி பாட்டு. * (இராகம்—நீலாம்புரி)

1 முண்டாசு கட்டிவரும் நொண்டி வீரப்பனே
கொண்டாடிப் பூசைகளைக் கொள்வீர்
2 எல்லைப் பிடாரியே எதிராக வந்து மெய்
கொள்ளைமுன் காவலாய்க் கொள்ளடி
3 கச்சை அரிவாள் வைத்த கருப்பண்ணசாமியே
இச்சையுடன் வேண்டும் என்தெய்வமே
4 நேயமறி கோழியும் நிணமூன்று சாவலுமே
தீயகள்ளும் வைத்து தெரிசித்து நின்ருேமே

[பூசாரி தீபாரதனை செய்கிருன்.
குடிகள் வணங்குகிருர்கள்]

போ வ:—அப்பா பண்டாரம்! இனிமேல் சாமியை வேண்டி, உடுக்கை யடித்துக் குறிகேட்டுச்சொல்லு.
[பூசாரி உடுக்கை அடிக்கிருன்.]

---

* From Nandanar

பூசாரி பாட்டு. பூசாரி மெட்டு.

முந்தி முந்தி விநாயகனே முருகனுக்கு மூத்தவனே
கந்தருக்கு முன்பிறந்த கணபதியே முன்னடவாய்
பேழை வயிற்றோனே பெருச்சாளி வாகனனே
ஒற்றைக் கொம்போனே உமையாள் திருமகனே

பூசாரி வ:—சாமி—என்னங்க போங்க—என்வயசுக்கு இந்த அதிசியத்தைக் காணேன்—உடுக்குப்பேசல்லிங்க.

1வது ர வ:—என்னப்பா சொல்லுது சாமி! நல்லா கேட்டு சொல்லு
[பூசாரி உடுக்கை அடிக்கிறான் ]

பூசாரி பாட்டு.

நல்லது சொல்லுகிறேன் நானெடுத்து அந்தவிதம்
பூசைகள் தான்போட்டு பொங்கலுமே தான்படைத்து
ஆடு கோழி தான்வெட்டி அஷ்டபூசை போடல்லியாம்

2வது ர வ:—நான் போனவருசமே! சொன்னேன் ஆயாளுக்குப் பூசை போடணுண்ணு—அப்படியே போட்டுடுவோம்.

பூசாரி பாட்டு.

நாடு செழித்திடுமா நல்லமழை தான்பெய்து
பாடுபட்டு நட்டபயிர் பாழாகப் போகுதென்று
இப்போதான் நீங்களென்னை எண்ணிவந்து பூசைபோட்டு
தப்பாது நிற்கிறிங்கள் தானல்லவோ என்று நம்ப
அம்மைமாகாளி அருகிலென்னைத் தானழைத்து
உத்தயிந்த சேதிதன்னை உறைத்து மலை ஏறப்போறாள்,

3வது ர வ:—சாமியை நாங்கபண்ண பெசவெல்லாம் பொறுத்துக்கச் சொல்லு ஆயா சொல்லுரத்தை யெல்லாம் செய்யரோம். எங்க குறை யெல்லாம எப்ப தீருமென்று கேட்டுச் சொல்லு,

[பூசாரி உடுக்கை அடிக்கிறான்,
வேறொருவன் சாமிவந்து ஆடுகிறான்.]

பூசாரி பாட்டு.

நல்லதம்மா தாயேயிந்த நாடு செழிக்கணுமாம்
அல்லலெலாம் போக்கி உன்னை, அண்டிவரச்செய்யணுமாம்
குத்தங்குறை யிருந்தாலும் உத்தமியே பொறுத்துக்கோ
சத்தி உந்தன் அருளாலே சடுதியிலே இந்த நாட்டில்
நத்தி வந்த வியாதியெல்லாம் நாழியிலே தானொழிய

மெத்த மிகவருந்தி வேண்டி வணங்குகிறோம்
உத்தரமே சொல்லி நீயும் உகந்த இடம் சேருமம்மா.

(உடுக்கை நிறுத்துகிறான்.
சாமிவந்தவன் பேசுகிறான்)

சாமி வ-வ:—அப்பா! நீங்கள்! இத்தனை நாளாய்! என்னை மதிக்காமலும்! நெனைக்காமலும்! இருந்தீங்கப்பா! ஆனாலும் உங்ககுறையை கொஞ்சநாளிலே தீர்க்கிறேன். இனிமே பயிருக்கு ஒரு சேதமும் இல்லை. எனக்கு மாசமொரு தரம் அஷ்ட பூசை போட்டு வாங்க—உங்களுக்கு ஒரு குறையும் வாராதப்பா!

[பூசாரி சூடம் கொளித்தி, தீபாராதனை காட்டி, எல்லோரும் வீபூதி பிரசாதம் வாங்கிக்கொண்டு போகிறார்கள்]

---

## களம் 1. அங்கம் 4.

இடம்:—டிமான்ஸ்ட்ரேடர் பிரதான ஸ்தலம்.
காலம்:—காலை 8 மணி
பாத்திரம்:டிமான்ஸ்ட்ரேடர்.

[டிமான்ஸ்ட்ரேடர் வருகிறார்]

டி வ:—உலகததில் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்லுவர்". ஒரு மனிதன் உலகவாழ்வில் எவ்வளவு உயர்ந்த நிலைமையில் இருந்தாலும் உழைப்பின் பெருமையை அறியவேண்டும். இதன் உண்மையை நமது தேச சரித்திரங்களும், புராணங்களும் விளக்கிக் காட்டுகின்றன.

டி பாட்டு. **லோகமான்ய பால —என்றமெட்டு**

காட்டிலும் நாட்டிலும் கானல் சாரலிலும்
காணும் சுகதுக்கங்கள் கவனியாமல்
மேட்டிமையாக முன் இந்திய மன்னர்கள்
மேவிய வாழ்க்கையை அறிந்திடுவோம்.

### தொகையரு

எத்தொழிலும் இந்நாட்டில் ஏற்றதென எளிதில் காட்ட
எழில் இடைப் பையனாகி
சித்தமகிழ் கிருஷ்ணபகவானன்று தாணியில்
சீர்பெருகு ஜென்மமேற்றார்.

## பாட்டு

ஏருழுகை யில்ஜனக மகாராஜன் முன்னே
சீருடைய சீதா தேவியாள் தன்னே
கூறும் படைச்சாலில் கண்டெடுத்த பின்னே
பேரும் புகழும் பெற்றார் புவிதனில் என்னே

## தொகையரு

மேவும் விவ சாயமே மேலான மாந்தர்க்கு
மேன்மை தரு மென்ப தற்கு
பூவுல கில் பலராமர் போற்றிக் கலப்பையை
பொருந்த வாயுத மாக்கினர் (கா)

டி வ:—நமது நாட்டில் பலராமர் கலப்பையை ஆயுதமாகக் கொண்டதும், ஜனகன் பொற் கலப்பை பிடித்து உழுததும், அவுரங்கசீப் குல்லா தைத்து விற்றதும், இன்றைக்கும் சீன, எகிப்து தேச மன்னர்கள் முதலில் பொற் கலப்பை பிடித்து உழுதபிறகே விவசாயிகள் உழ ஆரம்பிப்பதும் எல்லோரும் அறிந்த விஷயம். ஆகவே விவசாயத்தில் எனக்கும் இயற்கையாக இருந்த ஆசையினல் நான் முதலில் விவசாயக் கலாசாலையில் சேர்ந்தேன். காலேஜில சேர்ந்த பொழுது நான் இவ்விதம் டிமான்ஸ்ட்ரேடராய் வந்து இங்கிருக்கும் பெரியோர்களை யெல்லாம் பார்க்க நேரிடுமென்று எதிர்பார்க்கவில்லை. ஆனல் பரீக்ஷையில் பாஸ் பண்ணினதும் என் அதிர்ஷ்டவசம் கைமேல் வேலையும் கிடைத்தது. இதனல் B.A. M.A. பாஸ் பண்ணிவிட்டு அநேகர் வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருப்பது போலல்லாமல், விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக உழைக்க நேர்ந்தது என் பாக்கியமே.

இப்பொழுது மெசஞ்சர் விதை தினுசுகளுடன் புதுப்பாளையம் கிராமத்திற்குப் போய்விட்டான் நானும் அங்கே போகவேண்டும்.

(போகிருர்)

## களம் 2. அங்கம் 1.

இடம்:—புதுப்பாளையம் கிராமச்சாவடி

காலம்:—காலை 8 மணி

பாத்திரம்:—பொன்னன், ரயத்துக்கள், கம்பளத்தான், டிமான்ஸ்ட்ரேடர், மிராசுதார் மகன், மெசஞ்சர், கிராமமுன்சீப், தலையாரி.

1வது ரயத்து } வ:—என்ன அண்ணே பூசைபோட்டும் ஒண்ணேயுங் காணோம். பயிரிலே நோவு ஒண்ணும் தெளியிலேயே.

போ வ:—நாமென்ன பண்ணறது சாமியைத்தான் வேண்டிக் கொள்ளலாம்.

2வது ரயத்து } வ:—ஆமாம் சாமி பேரைச்சொல்லி, கோழி ஆடு திண்ணதுதான் கண்டபலன்.

3வது ரயத்து } வ:—பெரிய பண்ணை நிலமே இருந்த இடம் தெரியாமலிருக்கே.

போ வ:—பண்ணையார் போனபிறகு நிலத்தை கவனிப்பார் யாருமில்லை "தண்ணீர் இல்லாத வெள்ளாமையும், தான் உழாத நிலமும் தரிசு" என்று கேள்விப்பட்டதில்லையா? இப்போ அந்த ஏசண்டு பணக்காரராகிவிட்டார். தனக்கு வேண்டியவர்களுக்கு நிலத்தைக் குத்தகைக்குக் கொடுத்துக் கமிஷன் எடுத்துக் கொள்ளுகிறார். நிலத்தையும் சரியாய்ப் பாடுபட்டுப் பயிர் பண்ணுவதில்லை. ஏன் மாசூல் குறையாது?

1வது ரயத்து } வ:—இங்கேயும் பாதிப்பேரு ஊரிலே சிங்கப்பூர், பினங்கு, கண்டின்னு போய்ட்டாங்க.

2வது ரயத்து } வ:—ஏன் தம்பி பண்ணையாருக்கு அங்கே குதிரைப் பந்தயத்திலே பணம் கிடைச்சிருக்காமே.

போ வ.—இல்லேடா முதல்லே கொஞ்சம் வந்துதாம் பின்னாலே ரொம்ப நஷ்டம் வந்திடுச்சாம்.

3வது ரயத்து } வ:—அது எப்படி அண்ணே.

போ வ:—அங்கே குருதையைப் பந்தயம் உடுவாங்களாம் குருதை மேலே பணம் கட்டணுமாம்.

1வது ரயத்து } வ:—மேலேன்னா? அதன் வாலிலேயா பணங்கட்டணும்.

போ வ.—இல்லே—அதன் பேரை வைச்சுக் கட்டணுமாம். அது செயிச்சா பணம் கொடுப்பாங்களாம். செயிக் கல்லேன்ஞ கட்டினபணம் போச்சாம் கவுனர்கூட அதுக்குப் போவாராம் முருகன் எழுதியிருக்கான்.

2வது ரயத்து வ:—அதெல்லாம் நமக்குத் தெரிஞ்சு என்ன ஆவணும்.

3வது ரயத்து வ:—ஆமாம்—என்ன ஆவணும். நம்ப பயிருக்கு விசாதி வந்திருக்கு—அதுக்கு என்ன செய்யணுண்ணு சொல்ரத்துக்கு யாருமில்லேணு யோசனே பண்ணறேன்.

(கம்பளத்தான் வருகிறான்.)

கம் வ:—(குடு குடுப்பையை அடித்துக்கொண்டு)—நல்லகாலம் பிறக்குது-நல்லகாலம் பிறக்குது-மேலான தெசை வருது. (குடு, குடு அடித்தல்)

1வது ரயத்து வ:—இவன் என்னடா தினம் காலவேளேயிலே அடிச்சுக் கறான்,

கம் வ:—மலேயாள பகவதி, குட்டிச்சாத்தான், கொம்பேறி மூக்கன், ஜெக்கம்மாதேவி, தொட்டியக்கருப்பி, வட பத்திரகாளி. பச்சமலேமாகாளி, நாட்டுநன்ஞரி—நல்லகாலம் வருது, நல்லகாலம் வருது. (குடு, குடு)

போ வ:—என்னடா! நல்லகாலம் வருது நல்லகாலம் வருதுன்னு அடிச்சுக்கரே யாருக்கடா நல்லகாலம் வருது

கம் வ:—நாட்டுக்கு நல்லகாலம் வருது ஊருக்கு நல்லகாலம் வருது நடுசாமத்திலே சொல்லிட்டுப்போனேன். ஐயா முகத்திலே ராசகளே சொட்டுது உங்கமுகம் தங்கமுகம் பார்க்கற பார்வை கெருட பார்வை ஐயாவுக்குப் பணத்தொங்தி போடுது நீங்க ஒரு பெருங்காரியத்தைப்பற்றி யோசனேபண்ணிக்கொண்டிருக்கீங்க அது கொஞ்சநாளிலே கைகூடிவருது. (குடு குடு).

1வது ரயத்து வ:—ஆமாண்டா கம்பளத்தான் ஒரு குறிசொல்லடா இப்போ ஒண்ணு நினேச்சுக்கிட்டிருக்கேன் அது என்னண்ணு பார்த்து சொல்லு

கம் வ:—நல்ல வாக்குச் சொல்லடி, நல்லவாக்குச்சொல்லடி, நீங்க, மண்ணேப்பற்றி. பொன்னேப்பற்றி. பொருளேப் பற்றி, மாட்டைப்பற்றி, மனிதனேப்பற்றி ரோசனே பண்ணரீங்க அது சீக்கிரம் கைகூடி வருது பக்கிரி சாமத்திலே சொல்லிருக்கேங்க.

2வது ர வ:—அது எப்படிடா கைகூடும்

கம் வ:—நடு சாமத்திலே சொல்லிட்டுப்போனேன் இன்னம் கொஞ்ச நாளிலே வடக்கேயிருந்து ஒரு ஆள் வாரான் அதனாலே உங்களைப் பிடிச்ச கவலையெல்லாம் ஐயோ இண்ணு தொலையப்போவுது.

[கம்பளத்தான் போகிறான்]

3வது வ:—ஆமாண்டா ஆளு வருது ஆளு பயிரிலே விசாதி வந்திருக்கு இண்ணு அதைப்பற்றி ரோசனைபண்ணிட்டிருக்கேன் ஆளுவந்து என்ன பண்ணப்போறான் நீயும் அவனைப்போயி சோசியம் கேட்டியே

போ வ:—அப்படிச் சொல்லாதே கம்பளத்தான் நடு சாமத்திலே சுடுகாட்டிலேபோயி குறளிக்குப் பூசைபோட்டு ஊரிலே வந்து குறிசொல்லுவான் இண்ணு கேட்டிருக்கேன். போனமாசம் வடக்குத்தெருவிலே "அதிகாரஞ் செலுத்தினவன் அய்யோ இண்ணு போரான்" இண்ணு சொன்னான். சொன்ன பத்து நாளிலே, அந்தக்குடிகாரக் கோவிந்தன் செத்துப்பூடலையா அதனாலே நாம் ஒண்ணும் நம்பரத்துக்கில்லே.

[மெசஞ்சர் வருகிறான்.]

மே வ:— இன்ச்பெக்டர் வராறு.

எல்லாரும் வ:—இன்ச்பெக்டரா இப்ப இங்கே வாராங்களா

மே வ:—ஆமாங்க. [உடனே எல்லோரும் எழுந்து தலை வேஷ்டியை இடுப்பில் கட்டிக்கொள்கிறார்கள். மெசஞ்சர் போய்க்கொண்டிருக்கிறான்.]

1வது வ:—எந்த இன்ச்பெக்டர் பொலீசு இன்ச்பெக்டரா அவுங்கதான் நேத்து களவு கேசுக்கு வந்துட்டுப்போனாங்களே.

2வது வ:—பின்னே ஆரண்ணே.

3வது வ:—ஒருவேளை ரிவினியூ இன்ச்பெக்டராயிருக்கலாம் ஒருத்தரு புதுசா வரப்போறாருண்ணு சொல்லிக்கிட்டாங்க.

போ வ:—அந்த சேவகய்யாவைக் கேட்கலாம். அய்யா ஒங்களைத்தானே கூப்பிடறேன்.

[மெசஞ்சர் வருகிறான்.]

மே வ:—என்ன?

போ வ:—எந்த இன்ச்பெக்டர் வராறு?

மே வ:—விவசாய இன்ச்பெக்டர்.

எல்லோரும் } வ:—விவசாய இன்ச்பெக்டரா அது யாரப்பா அது இது வரை கேள்விப்பட்டதில்லையே

3வது வ:—நானும்கூட ஏமாந்துபூட்டேன் பாத்தியா

1வது வ:—சரி அது யாராயிருந்தா நமக்கென்ன நம்ம கவலே நமக்கு பின்னே உட்காரலாம்.

(பழையபடி எல்லோரும் வேஷ்டியை தலே யில் கட்டிக்கொண்டு உட்காருகிறுர்கள்.)

2வது வ:—விவசாய இன்ச்பெக்டர் இண்ணு விவசாயத்தைப்பத்திச் சொல்லுவாங்களா?

3வது வ:—விவசாயத்தைப்பத்தி இவுங்க என்னய்யா சொல்லப் போருங்க.

போ வ:—ஏன் அவசரப் படரேங்க அவுங்க வரட்டுமே என்ன தான் சொல்ராங்க இண்ணு கேக்கலாம்.

[டிமான்ஸ்ரேடர் சைகிளுடன் வருகிறுர். மெசஞ்சர் சைகிளே வாங்கி ஒரு பக்கமாய் வைக்கிறுன். ரயத்துக்கள் எழுந்திருக்கா மல் பேசிக்கொண்டிருக்கிறுர்கள்.]

டி வ:—இதுதாஞ புதுப்பாளேயம்

1வது வ:—ஆமாங்க

டி வ:—இது மஜராவா குப்பமா?

2வது வ:—இதுதான் தாய் கிராமங்க

போ வ:—நீ என்னடா அவசரப்படரே அவுங்க வந்தவுங்க நிக்கி ருங்க போயி நம்ம ரெட்டியார் ஊட்டிலிருந்து ஒரு குரிச்சி எடுத்துகிட்டு வாடா.

[3வது ரயத்து போய்க்கொண்டிருக்கிறுன்]

டி வ:—பரவாயில்லே நாற்காலி ஒன்றும் வேண்டாம் சும்மா நானும் கீழே உட்கார்ந்து கொள்ளுகிறேன்.

[டிமான்ஸ்ரேடர் கீழே உட்காரு கிறுர். 3வது ரயத்தும் திரும்பி வந்து உட்காருகிறுன்.]

டி வ:—இந்த ஊர் மூனிசீபு யாரு

போ வ:—சீனிவாசம் பிள்ளே இண்ணு ஒத்தரு இருக்காரு

டி வ:—ஊரிலிருக்கிறுரா?

போ வ:—எண்ணே நேத்து கிஸ்தி வசூலுக்கு கோயிலூருக்குப் போயிருந்தாரே வந்துட்டாரா?

1வது வ:—வந்துட்டாரு ஊட்டிலே இருக்காரு நான் வரபோது பாத்தேன் திண்ணெயிலே வெத்திலே போட்டுக்கிட்டு குந்தியிருந்தாரு.

டி வ:—மெசஞ்சர் இவ்வூர் முனிசீபைக் கூட்டிக்கொண்டு வா.

மெ வ:—கூட்டிக்கொண்டுவருகிறேன்

[மெசஞ்சர் போகிறான்.]

டி வ:—இந்த ஊரில் முக்கியமான மிராசுதார்கள் யாரு,

2வது வ:—இந்த ஊரிலே ஏழெட்டுப்பேரு இருக்காங்க

போ வ:—அவுங்களை இங்கே கூட்டியாரச் சொல்லணுங்களா

டி வ:—ஆமாம்

போ வ:—அதோ முனிசீபும் வந்துட்டாரு

(முனிசீபும், தலையாரியும் வருகிறார்கள்)

கி-மு வ;—ஸ்வாமி

தலை வ:—ஸ்வா...மி

டி வ:—நீங்கள் தானா இந்த ஊர் முனிசீபு

கி-மு வ:—ஆமாங்க

டி வ:—இந்த ஊரிலுள்ள முக்கியமான ரயத்துக்களை இங்கே வரச்சொல்லவேணும்

கி-மு வ:—செய்யரேனுங்க (தலையாரியைப்பார்த்து)

அடே தலையாரி நீ போயி முனியமுத்துக்கோனார், ராமசாமி கவுண்டர், கிருஷ்ணபடையாச்சி. அருணாசல மூப்பனார் இவுங்களை யெல்லாம் இன்ச்பெக்டர் வந்திருக்காருண்ணு இங்கே வரச்சொல்லு. அப்படியே ஊரிலே எல்லாரையும் வரும்படி தமுக்கடிச்சுப்புடு.

தலை வ:—ஸ்வா...மி

(தலையாரி தமுக்கு அடிக்கிறான்)

"சாவடிலே இன்ச்பெக்டர் எசமான் வந்திருக்காரு கலப்பை எரு விதை எல்லாம் சர்க்காருலே கொடுக்கிற தைப்பத்தி சொல்லப்போறாங்க எல்லாரும் வரணும்..."

போ வ:—விவசாயத்துக்கிண்ணு ஒரு இன்ச்பெக்டர் இருக்காங்களாசாமி போலீசு இன்ச்பெக்டரு, ரெவினியூ இன்ச்பெக்டரு, அம்மைக்குத்து இன்ச்பெக்டரு எல்லாரும் இங்கே வந்திருக்காங்க விவசாய இன்ச்பெக்டர் இண்ணு கேள்விப்பட்டதில்லிங்க

3வது ர வ:—உங்களுக்கு சர்க்காரிலே சம்பளம் கொடுக்கிறாங்களா சாமி.

டி வ:—ஆமாம்

1வது ர-வ:—நீங்கள் கிராமங்களிலே போயி என்ன செய்வேங்க

டி வ:—அதைப்பற்றி சொல்வதற்குத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். நான் இந்த ஊருக்கு வந்திருக்கிறது இதுதான் முதல் தடவை.

(சில கிராம ரயத்துக்கள் வந்து உட்காருகிறார்கள்.)
(மெசஞ்சரும் வருகிறான்)

டி வ:—விவசாய டிபார்ட்மெண்டார் செய்யும் வேலைகளைப்பற்றி உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

ரய வ:—சொல்லுங்கோ சாமி.

டி பாட்டு. (நொண்டிச்சிந்து)

இந்திய சோதரரே நமக்கு
இன்றிமை யாதது விவசாயம்
என்பதைத் தானறிவீர் அதற்கு
ஏற்றபடி ராஜாங்கத்தில் செய்கிறார்கள்
கோயம்புத்தூர் தனில் பெரிய விவ
சாயப்பண்ணையை வைத்தா ராய்ச்சிசெய்கிறார். (இ)

டி வ:—கோயம்புத்தூரில் ஓர் விவசாய ஆராய்ச்சிக் கலாசாலை இருக்கிறது. அதில் அநேக நிபுணர்கள் விவசாயமுறைகளின் நுட்பங்களை ஆராய்ச்சி செய்கிறார்கள்.

டி பாட்டு. ஷை

விளைச்சலைத் தான் பெருக்க—தக்கபல
முயற்சிகள் செய்து அவை மேலென்றுகண்டால்
நாட்டினில் மாந்தர் தமக்கு—அவைகளின்
நன்மைகளைச் சொல்லியே நவீனமுறையில்
கலப்பை மண் வெட்டி முதலாய்—வளரும்
களைவெட்டி ஆயுதமும் கண்டு தருவார் (இ)

டி வ:—அவ்விதம் கண்டுபிடிக்கும் முறைகள் லாபகரமாயிருந்தால் அதை உங்கள் நிலங்களில் நிரூபித்துக் காட்டுகிறோம். இது தவிரக் குடியானவர்களுக்கு சாகுபடிக்கு வேண்டிய செலவைக் குறைக்கக்கூடிய கலப்பை முதலியவைகளும் கொடுக்கிறோம்.

டி பாட்டு. டி

நிலங்களுக் கேற்ற விதையை—ஆராய்ச்சிசெய்து
பலந்தரு வனவற்றைப் பார்த்துக்கொடுப்பார்
தக்கஉரம் எது எனவே—நிலத்துக்கு
தக்கபடி சோதித்துணர்ந் தளித்திடுவார்
சரச மான விலைக்கு—மேற்கண்ட
சாமான்களை கொடுக்கவே தவங்கமாட்டார் (இ)

டி வ:—நிலங்களிலுள்ள சத்துக்களைக் கண்டுபிடித்து, அதற்குத் தகுந்த உரங்கள் போடவேண்டிய வழிகளும் சொல்லுகிறார்கள்.

டி பாட்டு. டி

நோய் பற்றும் பயிர்களிலே—மருந்துகளை
நோகாம லடித்துமே நிவர்த்திசெய்வார்
புதிய இம்முறை தனிலே—பழக்கவரும்
புத்தியுள்ள பண்ணையாட்க ளெவருக்குமே
காசுபண மின்றி இனமாய்—முறைகளை
கற்றுக் கொடுத்திடுவார் அட்டிகளின்றி
இந்த விதம் நன்மை புரியும்—கவர்மெண்டார்க்கு
என்றும் நன்றி செலுத்தியே வாழ்ந்திடுவோம் (இ)

டி வ:—உங்கள் பயிர்களில் வியாதிகள் வந்தால் அதற்குத் தகுந்த சிகிச்சை செவார்கள்.

பொ வ:—சாமி அதைப்பத்தி நல்லா சொல்லுங்கோ நீங்கவரும் போதுகூட விசாதியைப்பத்தித்தான் பேசிக்கிட்டிருந்தோம்.

டி வ:—இருங்கோ உங்களுக்கு ஒவ்வொன்றுகச் சொல்லுகிறேன் நான் சொன்னமுறைகளை உங்கள் நிலங்களில் நிரூபித்துக் காட்டுவதுமல்லாமல், உங்கள் பண்ணையாட்களையும், சர்க்கார் பண்ணைகளில் இனமாகப் பழக்கி வைக்கிறார்கள்

2வது வ.—சாமி நீங்க சொல்ரமாதிரி கலப்பை எரு விதை எல்லாம் வாங்கி நல்ல கேணி வெட்டி பயிர் பண்ணரும் பணத்துக்கு எங்கே போவது.

டி வ:—நில அபிவிருத்தி சட்டத்தின் கீழும், விவசாயிகளின் கடன் சட்டத்தின் கீழும், உங்களுக்கு நீங்கள் கேட்ட வகைகளுக்கு சர்க்காரில் கடன் கொடுக்கிறார்கள்.

3வது வ:—அப்போ ரொம்ப சவுரியந்தானுங்க

டி வ:—இதுவுமல்லாமல் உங்கள் நிலத்துக்கேற்ற பசுந்தாளடர்ந்த பயிர்கள் உண்டாக்க தகுந்த விதைகள் கொடுக்கிருர்கள்

1வது வ:—ஆமாம் அதை விதைச்சுப்புட்டு தீர்வை கொடுத்து தண்ணீர் பாச்சணுங்க நாங்கள் உள்ளத்துக்கு கொடுக்கிறதே கஷ்டமாயிருக்கு.

டி வ:—அவசரப்படாதேயுங்கோ—நான் சொல்வதைப் பூராவும் கேட்கவேண்டும் பசுந்தாள் உரப்பயிர்களுக்குத் தண்ணீர் தீர்வை கிடையாது நஞ்சையில் மேய்ச்சலுக்குண்டான புல்லுக்கும், உவர் நிலங்களில் உப்பை அடித்துக் கொண்டு போகவும் தீர்வை யில்லாமல் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ளலாம்

2வது வ:—சாமி நீங்க சொல்ரதெல்லாம் நல்லாயிருக்குங்க செய்யரோம் மழை எப்போ வரும் சொல்லுங்க

டி வ:—மழையா கற்ப ஓட்டம் சரியாகத்தான் ஓடியிருக்கு பொருத்துக்க சித்திரை கார்த்திகையில் மழையில்லேயென்று கவலேப்படாதே பயிர் கொஞ்சம் வாட்டமாய்த் தானிருக்கும் இது எல்லாம் சேர்த்துவைத்து ஸ்வாதி கார்த்திகையில் வெளுத்து வாங்கும் இன்னும் 10 நாளிலே மழை பெய்யும்.

3வது வ:—பஞ்சாங்கத்திலேகூட அப்படித்தான் போட்டிருக்கு பாத்தேன்.

1வது வ:—அப்போ பெய்யற மழை விசேஷமா சாமி

டி வ:—இந்த மழையால்தான், முத்துச்சிப்பியில் முத்து உண்டாவதற்கு காரணம். இப்போ மழை பெய்தால் உன் பயிரும் முத்து முத்தாய் விளேயும்.

பொ வ:—நீ என்னடா சாமியை சோசியம் கேட்டுக்கிட்டிருக்கே, இந்த ஊரிலே பயிரிலே விசாதி வந்திருக்கு. அதுக்கு என்ன செய்யலாம் சொல்லுங்கோ சாமி

டி வ:—உங்களுக்கு விவரமாக அதைப்பற்றி சொல்லுகிறேன் கேளுங்கள்.

டி பாட்டு. **பாதுகையே—என்றமெட்டு**

புது முறையே புதுமுறையே

அனுபல்லவி

பொதுநலந் தரும்பயிர் அதிவிரைவில் செழிக்க (பு

சரணம்

பலந்தரும் பயிர்களைப் பாழாகக் கெடுத்து
பாரிலுள் ளோர்க்குப் பரி தாபத்தைக் கொடுத்து
நிலந்தனில் ஏற்படும் நோய்களைத் தடுத்து
நலந்தரும் முறைகளை நானுரைப்பேன் எடுத்து (பு)

2 சாம்பல்நோய் இலைகளின் துளிர்களில் படர்ந்து
காம்பொடு பிஞ்சுகள் கடுகியே உதிர்ந்து
போம் அத னால் சேதம் போகுமே அடர்ந்து
நாம் பல முறைசெய நாடுவோம் தொடர்ந்து (பு

3 செழித்துவரும் இலைபூங் கொத்துகள் மேலே
தேர்ந்தபோர்டோ மிக்சரை தெளிப்பதி னாலே
அழித்திடும் சாம் பல்நோய் அகலுமக் காலே
அதிவிரைவி னில் பயிர் வளரும் பின் னாலே (பு)

டி வ:— சாதாரணமாய் திராட்சைக்கொடியிலும், வெண்டை முதலிய செடிகளிலும், சாம்பல் நிறமுள்ள. ஒரு பூஞ் சாள நோய் படரும்.

2வது ர-வ:— ஆமாங்க நீங்க சொல்ரமாதிரிதான் இருக்குங்க.

டி வ:— இந்த வியாதிக்கு, சுண்ணாம்பு, துத்தம் நீர்கலந்த ஓர் மருந்தை யடித்தால், அந்த வியாதி போய்விடும்

டி பாட்டு. ஷை மெட்டு

4 அசங்கிதக் கரும்புகை பூஷாணம் போலே
அசுவுணி எனும் செடிப்பேன் கொண்ட தாலே
நசுங்கிடப் பயிர்களை நாடுமக் காலே
நலமுடன் தாக்குவோம் நன்மருந் தாலே (பு)

5 ஓங்கிய மீன் எண்ணெய் புகையிலைச் சாரும்
வாங்கிய சோப்பும் வகையுடன் சேரும்
பாங்குடன் கலந்து பின் பயிர்களில் நேரும்
தீங்கிடும் நோய்களும் தெளித்திடத் தீரும் (பு)

டி வ:— அசுவுணி யென்னும் செடிப் பேன் என்ற சிறு பூச்சிகள் செடிகளை உலரச்செய்யும். இதற்குப் புகையிலைச்சாரு அல்லது சீமை எண்ணெய், சோப்புக் கலந்த நீர் முதலியவை அடிக்கலாம்.

டி பாட்டு ஷை மெட்டு

கடலையில் பட்டான் மூட்டை கம்பளிப் பூச்சி
கண்டு பொருக்காவிடில் காணுமே தாழ்ச்சி

பட்ரும் கம்போடியாப      ருத்திச்செடியின் வளர்ச்சி
பருவமறிந்தழித்தால்      பலன் உண்டு மகிழ்ச்சி (4)

பொ வ:—இந்த மருந்தெல்லாம் நீங்க கொண்டு வருவீங்களா:

டி வ:—கொண்டுவருகிறேன்.

3வது சாமி இந்த ஊரிலே தண்ணி கஷ்டம் சாஸ்தி, நீங்கள் தண்ணியை மட்டும். எங்களுக்கு கொடுத்திட்டீங்களூன்ஞு, நீங்கள் சொல்ரமாதிரி எல்லாம்

டி வ:—அதற்கு உங்களுக்கு நான் என்ன செய்யணும்.

3வது வ:—இந்த ஊருலேயிருந்து ஒரு மைலுக்கு வடக்கே ஒரு காட்டு ஓடை இருக்குது. அதன் வழியைத் திருப்பி நம்ம ஊர் குளத்தில் கொண்டுவிட்டால் தண்ணித்தட்டு வராது

டி வ:—இதற்கு வேறு இஞ்சினீயர்கள் இருக்கிருர்கள் அவர்களுடன் யோஜித்து வேண்டியது செய்யலாம்.

(செங்காராஜன் வருகிருன்.)

செ வ:—நீங்கள் யார் சார்

டி வ:—நான் இந்த தாலூகா விவசாய டிமான்ஸ்ரேடர்.

செ வ:—I see. நீங்கள் Agricultural Department-ல் ஒரு Subordinate போலிருக்கு.

டி வ:—ஆமாம், தாங்கள்...............

பொ வ:—இவுங்க, இந்த ஊரு பட்டா மணியாருமவங்க இவுங்க வடக்கே போயி யென்னமோ பெரிய பரீச்சை யெல்லாம் குடுத்துட்டு வந்திருக்கிருரு பெரிய வேலேகூட வரப்போவுதாம்.

செ வ:—ஏன் சார்! அப்போ நான் உங்களே ஒன்று கேட்கலாம் என்று நினேக்கிறேன். Of course nothing of importance yesterday என் father ஒரு ஏக்கரா tobacco cultivate பண்ணலாமென்று, என் வீட்டு பண்ணே servant-ஐக் கேட்டுக்கொண்டிருந்தார். நான் இதில் எல்லாம் அவ்வளவு Interest எடுத்துக்கொள்வதில்லே, நீங்கள் அதற்கு வேண்டிய quantity of seeds supply பண்ணமுடியுமா? If I am not giving you much trouble.

டி வ:—அதற்கென்ன வரவழைத்துக்கொடுக்கிறேன்.

செ வ:—அப்போ! Kindly supply one bag அதை ஒரு ஏக்கராவில் Sow பண்ணச்சொல்லிவிடுகிறேன்.

டி வ:—ஒரு மூட்டையா! ஒருபிடிகூட ஜாஸ்தி ஆயிற்றே

செ வ:—Is it! I am sorry. Paddy மாதிரி இருக்கும் என்று guess பண்ணிக்கேட்டேன்.

பொ வ:—இவுங்க சின்னப்புள்ளெயிலிருந்தே படிப்பிலே போயிட்டாங்க இதெல்லாம் இவுங்க என்னுத்தே கண்டாங்க.

1வது ர-வ:—சாமி! ஒங்களே ஒண்ணு கேக்கணும்ணு நினெச்சுக்கிட்டு இருக்கேங்க.

டி வ:—என்ன?

1வது ர-வ:—நான் ஒரு ஆளுக்கு பாண்டுமேலே 50 ரூபாய் பணம் கொடுத்தேங்க, அந்த ஆளு இப்போ எங்கேயே ஓடிப்பூட்டான் இருக்கிரவெடந்தெரியலிங்க நான் வந்து......

பொ வ:—அதெல்லாம் வக்கீலய்யாவைக் கேக்கணும்டா இவுங்களே கேட்டா என்ன சொல்லப்போராங்க.

டி வ:—நான் சொன்ன கலப்பை விதை தினுசுகளே எல்லாம் உங்களுக்கு காட்டுகிறேன்.
மெசஞ்சர்! அந்த இரும்புக் கலப்பையை இப்படிக் கொண்டுவா! (மெசஞ்சர் போய் கலப்பையை கொண்டுவந்து வைக்கிறான்.)

டி வ:—இந்தக் கலப்பையால் யாராவது உழுது பார்க்கிறீர்களா.

1வது ர-வ:—(கலப்பையின் பக்கத்தில் வந்து பார்த்துவிட்டு) ஏ! அப்பா!! இதுக்கு மாட்டுக்கு எங்கே போரது சாமி இது மாட்டு கழுத்தே முருச்சுடும்.

2வது ர-வ:—(கலப்பையை தொட்டுப்பார்த்து) இது கத்திமாதிரி இருக்கு. மாட்டுக்காலே ரெண்டா, வெட்டிபுடும், அப்புரம் மாடு ஒரு தோளுலே, கலப்பெயே ஒரு தோளுலே தூக்கியாரணும்.

3வது ர-வ:—இது! வலதுபக்கத்துலே இல்லே மண்ணே தள்ளிக்கிட்டு போவும்போலேயிருக்கு. இந்த செரவு மாதிரி இருக்கே அதெ எடுத்துப்புட்டு குடுங்க உளுது பாக்குறேன்.

பொ வ:—ஒங்களுக்கு மண்டையிலே மூளே இருந்து பேசுரீங்களா என்ன ஆளுக்கு ஒருபுரமா என்னமோ கத்துரீங்களே! (கலப்பையைத் தூக்கிப்பார்த்துவிட்டு) என்ன! நம்ம பெரிய கலப்பையே விடவா இது கனம்.

1வது ர-வ.—[தூக்கிப்பார்த்துவிட்டு] இல்லே அண்ணே! நான் அந்த இரும்பை பாத்துபுட்டு பயந்துட்டேன்.

பொ வ:—பின்னே சொல்லுரியே! நம்ம கலப்பைக் கொழு மாட்டுக் காலுலே ஏரரது இல்லியா? எல்லாம் நாம் பிடிச்சு உழுவரதுலே இருக்கு

2வது ர-வ:—ஆமா அண்ணே,

பொ வ:—இந்தக் கலப்பை மாத்திரம் சரியா உழுதுடுச்சின்னு தச்சன், கொல்லன் ஊடுபோயி தொங்கவேண்டாம்.

3வது ர-வ:—இனிமே அவுங்கள் பொழப்புப் போச்சு

பொ வ:—இவுங்க கடக்குராங்க எங்கிட்ட நல்ல மாடு இருக்கு நான் உழுது பாக்குறேன்.

டி வ:—இதனுல் உழுவதைப்பற்றி நீங்கள் யோஜிக்கவேண்டாம் நான் பக்கத்திலிருந்து உழுது காட்டுகிறேன். என் மெசஞ்சரை இங்கே இருந்து உங்களுக்கு வேண்டிய புது முறைகளை உங்கள் நிலங்களில் செய்துகாட்டச் சொல்லுகிறேன்.

3வது ர-வ:—சாமி! நீங்க நெல்லு சொன்னீங்களே இந்த பிந்துன பட்டத்திலே நடும்படியா ஒரு தினுசு கொடுங்க நட்டுப் பார்க்கிறேன்.

டி வ:—பூம்பாளை என்ற ஒரு நெல்லு இருக்கு அதைக் கொடுக்கிறேன்.

2வது ர-வ:—இந்த கலப்பையால் நானும் கொஞ்சம் உழுது பார்க்கிறேன்

டி வ:—(மெசஞ்சரைப்பார்த்து) இவர்களுக்கு வேண்டியதை செய்துகொடு. ஒருவருக்கு நல்ல எருக்குழி வெட்டி கொட்டகை போட்டு, எரு சேர்க்கும் முறையையும் காட்டு.

1வது ர-வ:—ஆமாம் சாமி!! சர்க்காருலே இதெல்லாம் என்னத்துக்கு பண்ணுராங்கோ.

3வது ர-வ.—இவுங்க சொல்லுகிறதெயெல்லாம் பண்ணி ஒரு கலம் ரெண்டு கலம்கூட கிடைச்சா அதெ வச்சுக்கிட்டு சர்க்காருலே வரியை சாஸ்தி பண்ணுவாங்க.

டி வ:—சர்க்காரில் வரியை ஜாஸ்தி பண்ணவேண்டுமென்றால் உடனே நேராக செய்துவிடலாம். உங்களுக்கு இம்மாதிரி பணச் செலவு செய்து ஜாஸ்தி மாசூலைக் காட்டி பிறகுதான் செய்யவேண்டுமென்பதும் கட்டாயமில்லை. நமது தேசத்தில் 100க்கு 87 பேர் விவசாயிகள் ஆகையாலும், குடியானவர்களிடம் சர்க்காரில் தீர்வைகள் வாங்குவதாலும், நமக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்ய அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பொ வ:—அவுங்க இப்படித்தாங்க கேட்டுக்கிட்டு இருப்பாங்க,

டி வ:—(குடியானவர்களைப்பார்த்து)
நான் போய்விட்டுவருகிறேன்.

எல்லோ வ:—நல்லது போயிட்டு வாங்க.

[டிமான்ஸ்ரேடர், ரெங்கராஜன். மெசஞ்சர் போகிறார்கள்.]

பொ வ:—நான் சொல்லல்லியா! கம்பளத்தான் சொன்ன எதாச்சும் வரும்ண்ணு, அவனு சொல்ரான் அந்தக் குரளி யில்லே சொல்லச்சொல்லுது.

2வது ர-வ:—சரி! எல்லாம் நல்லதுக்குத்தான்.

1வது ர-வ:—போவலாம் நேரம் ஆவுது வாங்க.

(எல்லோரும் போகிறார்கள்.)

---

## களம் 2. அங்கம் 2.

இடம்—பட்டணம் தனபால முதலியார் மாளிகை.

காலம்:—காலே 10 மணி.

பாத்திரம்:—தனபாலன், சுலோசனு, முருகன்.

[தனபாலன் தூங்கி எழுந்து தன் உடையை அணிந்துகொண்டு].

த வ:—எவ்வளவு தரம் முகத்தை சுத்தம் செய்துகொண்டாலும் கண் எரிச்சலும் தலே வலியும் ஒழிந்தபாடில்லே. மணி 10 ஆகிவிட்டது இன்னம் அரைமணி நேரத்தில் எலக்ஷன் ஏஜண்டுகள் வந்துவிடுவார்கள். செய்யவேண்டிய வேலே ரொம்ப பாக்கி இருக்கிறது.

[சுலோசனு வருகிறாள்.]

சு வ:—தூக்கம் ஒருவகையாகவிட்டதா உங்களே, நானும் இரண்டு தரம் வந்து பார்த்துவிட்டுப்போனேன் அயர்ந்த நித்திரையில் இருந்தீர்கள்.

த வ:—இவ்வளவு நேரம் தூங்கியும், தலேவலியும், கண் எரிச்சலும் போகவில்லே.

சு வ:—ஆமாம்! நாம நேற்று ராத்திரி சதிர் கச்சேரியில் இருந்து வரும்பொழுது மணி 3-க்குமேல் இருக்கும்.

த வ:—இம்மாதிரியே ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு காரணத்தைமுன்னிட்டு நாழிகை ஆகிவிடுகிறது. சரி! இன்றையப் பொழுதை எப்படிப் போக்கப்போகிறாய்.

சு பாட்டு. (பாரா யெந்தன் பாவையே—என்ற மெட்டு)

நாடகசினிமா பாடகராட்டம்
நளின ஒய்யாரசி னேகிதர் கூட்டம்
மாடமாளிகை நறு மண நந்தவனமும்
மாதுநான் பார்த்து மகிழ்ந்திடுவேன்.

சு வ:—நாதா! இந்த பட்டிணத்தில் பொழுதுபோக்குவது தானு கஷ்டம் இங்கு வந்த நாள்முதலாய் இங்கிருக்கும் மாடமாளிகைகளும், ரோடுகளும், சினிமா, நாடகக் கொட்டகைகளும் பூந்தோட்டங்களும், மனதிற்கு எவ்வளவோ ஆனந்தத்தைக் கொடுக்கின்றன. இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள்.

சு பாட்டு. ஷை மெட்டு

கடற் கரைக் காற்றும் காக்ஷிகள் போட்டி
மடக்கொடி மாதர் தம் மாலை டீ பார்ட்டி
நடத்திடவே எந்தன் நண்பர்கள் நடுவினில்
நாளைக்கழிப்பேன் நலம் பெருவேனே.

சு வ:—மத்தியானம் நம்ம வீட்டிற்கு, ரத்னுபாயும், சிநேகிதர்களும் வருகிறுர்கள். சாயங்காலம் மாதர் சங்கத்தில் ஒரு டீ பார்ட்டி, பிறகு சமுத்திரக்கரை போகலாம். ராத்திரிக்கோ டிராமா, சினிமா, டிக்கெட்டுகள் வந்திருக்கு தாங்கள் வருகிறீர்களா தாங்கள் வந்தாலும், வராவிட்டாலும் தற்கால நாகரீகப்படி இரண்டு சேலைகள் வாங்க 200 ரூ. பணம் வேண்டும்.

த பாட்டு. ஷை மெட்டு

சட்ட சபைக்கு நான் மெம்பராய் வரவே
தான் தேர்தல் நடத்தி ஜெயித்திடவேண்டும்
அட்டி யில்லாமலே அதற்கொருபத்து
ஆயிரம் ரூபாய் அவசியமே.

த வ:—நான் இந்த வருஷம் சென்னை சட்டசபையில் ஒரு ஸ்தானத்திற்கு அபேக்ஷகராய் நிற்பதால் தேர்தலுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். அதற்கும் நாம் பேசிக் கொண்டிருந்தபடி 10000 ரூ. வரை சிலவழிக்க உத்தேசம்.

சு பாட்டு. ஷை மெட்டு.

கண்டு ஆனந்தம் கொண்டிடத்தானே
கிண்டியில் குதிரை பந்தய மாமே
பெண்டிரில் பலரும் போவாரதற்கு
சென்றிடப் பணமும் வேண்டும் நமக்கே.

சு வ:—நாதா! அடுத்த வாரம் கிண்டியில குதிரைப் பந்தயம் ஆரம்பம். அதற்கு சினேகிதர்களில் பலர் போவதாக உத்தேசம். அதற்கும் அவ்வளவு பணம் வேண்டும்.

த வ:—இவைகளுக்குப் போதுமான பணம் இருக்கிறது.

சு வ:—நான் முன்னமேயே சொன்னபடி நிலத்தில் வரும் மாசூலேயும், விவசாயத்தையும் நம்பியிருந்தால் நமக்கு செலவுக்கேற்ற வரும்படி வராது. பணம் சேர்க்கவும் முடியாது.

த வ:—நீ சொன்னதை நான் மறக்கவில்லே.

த பாட்டு. ஷை மெட்டு.

ரப்பர் தோட்டமுடன் தங்கச்சுரங்கத்தில்
நாற்பதி னுயிரம் பங்கு சேர்ந்தோமே
ஒப்பில்லா லாபம் வருவது நிசமே
செப்பினேன் பணமிருந் திடும் நம் வசமே

த வ:—நாம் யோஜித்தபடி மலேயா தேசத்திலுள்ள ரப்பர் தோட்டத்திலும், ஆப்பிரிக்கா தேசத்து தங்கச் சுரங்கத்திலும் சில பங்குகள் 40000 ரூ. கொடுத்து வாங்கியாகி விட்டது. அந்த இரண்டு இடங்களிலும் இருந்து ஏராளமான லாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

சு வ:—நாதா! இப்பொழுதுதான் ஞாபகம் வருகிறது. நமது குழந்தைக்கு இன்னும் பத்து தினங்களில் வருஷப் பிறந்த நாள் இதை ஒரு காரணமாய் வைத்துக்கொண்டு அன்றைக்கு நமது சினேகிதர்களுக்கு விமரிசையாக ஓர் விருந்தளிக்கவேண்டும். அந்த சமயத்தில் நான் அணிந்துகொள்ள டாக்கர் அண்டு சன்ஸ் கம்பெனியில் போய் 5000 ரூ. பெருமான வைர நகைகள் வாங்கி வர வேண்டும்.

த வ:—என்னுடைய சட்டசபை சம்பந்தமான வேலேகள் இன்னும் ஒரு வாரத்தில் முடிந்துவிடும். பிறகு விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். நான் இப்பொழுது வேறொரு விஷயத்தைப்பற்றி பேசவிரும்புகிறேன்.

சு வ:—என்ன அது!

த வ:—நாம் ஊரிலிருந்து வந்து 4, 5 வருஷங்கள் ஆகியும் நம் நிலங்களைப்போய் ஒருதடவைகூடப் பார்க்கமுடியவில்லை.

சு வ:—ஆமாம்.

த வ:—இங்கு சட்டசபை சம்மந்தமான வேலைகள் இருப்பதால் நம் முருகனையாவது போய் பார்த்துவர அனுப்பலாம் என்று யோஜிக்கிறேன்.

சு வ:—அதற்கென்ன அவ்விதமே செய்யலாம். நான் இப்பொழுது நம்முடைய காரில் கடைப்பக்கம் போய்வருகிறேன்

த வ:—அப்படியே செய். நீ போகும் பொழுது இங்கே முருகனை வரச்சொல். [சுலோசனை போகிறாள்.]

த வ:—(தனக்குள்) நான், இந்தப் பட்டணத்திற்கு வந்த பொழுது, இருந்த நிலைமையில், இப்பொழுது இல்லை, விளைந்த மாசூலுக்கு விலையும் இல்லை. விற்பதற்கு உண்டான வசதிகளும் குறைந்துகொண்டு வருகின்றன. அதோடு என்ஏஜண்டும் விளைச்சல் இல்லை யென்று வருஷா வருஷம் பணம் குறைவாக அனுப்புகிறான். இதன் காரணத்தை அறியவேண்டும். என் மனைவியின் மனம் கோணாமல் சந்தோஷமாக அவள் இருப்பதற்கே இவ்விடம் வந்தேன். நாளுக்கு நாள் இப்பொழுது சிலவு ஜாஸ்தியாகிவருகிறது. இதை என் காதலி எட்டி யோஜிக்கவில்லை. இது விஷயமாக அவளிடம் எப்பொழுது. எப்படி சொல்வதென்றுதான் தெரியவில்லை. இருக்கட்டும் சமயம் வரும்பொழுது பார்த்துக்கொள்ளலாம்.

மு வ:—ஸ்வாமி! [முருகன் வருகிறான்.]

த வ:—முருகா! நம் நிலங்களைப் போய் பார்த்து ரொம்ப காலம் ஆய்விட்டது. ஏஜண்டும் மாசூல் இல்லை என்று பணம் குறைவாக அனுப்புகிறான். உனக்குப் பொன்னன் ஏதாவது எழுதியிருக்கிறானா?

மு வ:—இப்போதான் ஒரு கடுதாசி வந்திருக்குங்க. அதெ ஒங்களண்டே காட்டலாமெண்ணுவந்தே. அங்கே என்னமோ சர்க்காருலே இப்போ ரொம்ப நல்லது பண்ணுராங்களாம். நல்ல விதை யெல்லாம் கொடுத்து, மண்ணுக்கு ஏத்த எருவெல்லாம் போட்டு, பயிருக்கு விசாதி வந்தா மருந்தடிச்சு, இப்படி எல்லாம் செய்யராங்களாம். இதெல்லாம் ஒரு விவசாய இன்ஸ்பெக்டருவந்து செலவு இல்லாமேசெய்து கொடுக்கிறாராம். என்னெகூட, வந்து பாக்கச்சொல்லி பொன்னன் எழுதியிருக்கிறான்.

த வ:—ஓஹோ! அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டாயிருக்கலாம். அப்போ! நீ போய் அந்த விவசாய இன்ஸ்பெக்டர் என்ன வேலே செய்கிறார், நமது ஏஜண்டு நிலங்களே சரியாய் பார்த்து வருகிருரு என்று அறிந்துவா.

மு வ:—நல்லதுங்க! இன்னிக்கே புறப்படறேன் (போகிறார்கள்.)

---

## களம் 2. அங்கம் 3.

இடம்:—புதுப்பாளேயம், கிராமச்சாவடி

காலம்:—காலே 8 மணி

பாத்திரங்கள்:—டிமான்ஸ்ட்ரேடர், டிப்டி டைரெக்டர் முருகன், பொன்னன், ஏஜண்டு குடியானவர்கள், மெசஞ்சர்.

(டிமான்ஸ்ட்ரேடரும், மெசஞ்சரும் வருகிறார்கள்)

டி வ:—மெசஞ்சர்! நவீன விவசாயமுறைகளே அனுஷ்டித்து வரும் ரயத்துக்களே அழைத்துவா.

மெ வ:—வரேனுங்க. (மெசஞ்சர் போகிருன்.)

(முருகனும் பொன்னனும் வருகிறார்கள்.)

பொ வ:—சாமி! வாங்க!! இப்பொ உங்களெபத்திதான் பேசிக்கிட்டு வந்தோம், நல்லவேளேயா நாங்க நெனச்சதும் நீங்க வந்துட்டீங்க.

டி வ.—(முருகனேகாட்டி) இவன் யார்?

பொ வ:—இவன் பெரிய பண்ணே மிராசுதார் வீட்டுப் பண்ணேயாளு.

மு வ:—பண்ணேயார் பட்டணத்துக்குப்போய் 4, 5 வருஷம் ஆவுது நானும் கூடப்பொயிருந்தேங்க.

டி வ:—அப்போ அவர்கள் நிலங்களே இங்கே யார் பார்த்துக் கொள்ளுகிறார்கள்?

மு வ:—காவாலி நாயக்கன்னு ஒரு ஏசண்டே பண்ணேயார் வச்சுட்டுப்போனரு அவர் மாசூல் குறஞ்சுபோச்சிண்ணு ஒவ்வொரு வருசமும் பணம் சரியா அனுப்புவதில்லே, அதெத்தான் பாத்துட்டுவா என்னே அனுப்புச்சாரு. நேத்துதான் வந்தேங்க.

டி வ:—அந்த ஏசண்டை நான் பார்க்கமுடியுமா?

மு வ:—அவுரு கூப்புட்டா வரப்போராரா.

பொ வ:—அண்ணே! அதோ போறுரு கூப்புடட்டுமா?
(ஏஜண்டு தற்செயலாய் அவ்வழி போகிறுர்)

மு வ:—கூப்புட்டு பாரு. (பொன்னன் போய் சந்திக்கிறுன்)

பொ வ:—(ஏசண்டைப் பார்த்து) விவசாய இன்ஸ்பெக்டர் சாவடியிலே வந்திருக்காரு. ஒங்களே கண்டு சில வார்த்தைகள் பேசணுமாம் கூப்புடுறுரு

ஏ வ:—(தனக்குள்) இப்போ! இவரைப்பார்த்து நமக்கு என்ன ஆகணும். பண்ணையார் நிலம் வெளஞ்சா யென்ன வேளெயாட்டி என்ன. எப்படியும் வெளச்சல்லே ஒரு பாகம் பண்ணையாருக்குத் தெரிஞ்சும், தெரியாமலும் வந்துவிடுகிறது. ஆகையால் இந்தப் பொன்னனை ஒரு சாக்குப் போக்குச்சொல்லி அனுப்பிவிடலாம். (பொன்னனைப் பார்த்து) நான் இப்போ ஒரு அவசர காரியமாய் போய்க்கொண்டு இருக்கேன் அவுங்க நாளைக்கு இங்கே இருந்தா வந்து பாக்குறேன்னு சொல்லு.
(ஏஜண்டு போகிறுர்—பொன்னன் திரும்பிவருகிறுன்.)

பொ வ:—அவர் என்னமோ அவசர வேலையாய் போறுராம் நாளைக்கு நீங்க இங்கே இருந்தா வந்து பாக்கரேண்ணு சொன்னுர். (வேலுசாமி கவுண்டர் வருகிறுர்.)

வே வ:—சாமி! ஒங்க ஆளு வந்து சொன்னுன், நீங்க சாவடியிலே வந்திருக்கிங்கேண்ணு, அப்படியே நேர வந்தேங்க. வெல்லம் காச்ச, சிந்துவாகி அடுப்புக்குவேண்டிய கொப்பரை, சன்னல், முதலியவை வாங்கி வச்சிருக்கேன். அந்த அடுப்பு கொஞ்சம் போட்டுக்கொடுக்கணுங்க.

டி வ:—அதற்கென்ன! போட்டுத்தருகிறேன்.
(ரெங்கசாமி ரெட்டியார் வருகிறுர்.)

ரெ வ:—ஸ்வாமி! நம்ம வீட்டுப்பையன் இங்கே விளையாடிக் கொண்டு இருந்தான் நீங்கள் கொடுத்த புதுதினுசுக் கரும்பு அவனுக்கு திங்க நல்லாருக்காம் அவன் என்னண்டே ஓடியாந்து கரும்பு கொடுத்த ஐயா வந்திருக்காருண்ணு சொன்னுன். அந்தக் கரும்பைப் பத்தி கேக்கலாம்ண்ணு வந்தேன்.
(அழகப்படையாச்சி வருகிறுர்)

அ வ:—ஸ்வாமி! களவெட்டுக்கு ஆளெ உட்டுட்டு புறப்பட்டுக் கொண்டிருந்தேன். ஒங்க சேவுக ஐயா வந்து சொன்னுருங்க. தம்பியே கொல்லேக்கு அனுப்புச்சுட்டு வந்தேங்க

என்ன! போங்க! "கடன் வாங்கியும் பட்டினி கண்ணு லம் பண்ணியும் சங்யாசி"ங்கர கதையாச்சுங்க.

டி வ:—என்ன! சங்கதியைச் சொல்லும்.

அழ வ:—நீங்க! மாதிரிக்கு உழக்கொடுத்த கலப்பை நல்லா யிருக்குண்ணு என் புகையிலைக்காடு உழ ஒரு கலப்பை கேட்டேன்.

டி வ:—ஆமாம்

அழ வ:—நீங்க வாங்கிக்கொடுத்திங்களா. அதெ வாங்கினேனே. நான் ஒருநா கூட உளுதுபாக்கலே. எல்லாரும் வந்து எனக்கு எனக்கிண்ணு தூக்கிட்டுப் போராங்க. "ஊருக் கொரு மோளத்தான் ஆருக்குண்ணு ஊதுவான்"

டி வ:—உங்களுக்கு இப்பேது என்ன செய்யவேண்டும் சொல் லுங்கள்.

அழ வ:—அதெப்பத்திதான் ஒங்களண்டே யோசிக்கலாமுண்ணு வந்தேன். இந்த ஊரிலே எல்லாருக்கும் கலப்பை வாங்கணும்ணு ஆசைதான், ஆனு உடனே பணம் கொடுத்து வாங்க சக்தியில்லே.

டி வ:—அதற்கொருவழி யிருக்கிறது. தக்காவிக் கடன் கீழ் இந்த கலப்பையை சர்க்காரில் முதலில் கொடுத்துவிட்டு பணத்தை ஒரு வருஷம் கழித்து வாங்கிக்கொள்ளு கிருர்கள்

அழ வ:—அப்போ! ரொம்ப சவுரியந்தாங்க. அவுங்களெ எல்லாம் இங்கே கூட்டியாரேன். பேரெல்லாம் எளுதிக்கிட்டு அதுக்குவேண்டியதை செய்யுங்க இந்தூரிலே, 150 கலப் பைக்குமேலே வாங்க ஆளிருக்கு.

(வேணுநாயக்கர் வருகிருர்).

வே வ:—ஸ்வாமி! ஒருவாரமா வருவிங்கண்ணு எதிர்பார்க்கி றேன். இன்னிக்குத்தான் பாக்கக்கிடச்சுதுங்க.

டி வ:—என்ன சமாசாரம்.?

வே வ:—நீங்க! தைத்தொழில் இலாகாவிலிருந்து அந்த தொளே போடும் கருவி வாங்கிக்கொடுக்கவில்லையா, அவுங்கவந்து வேலைசெய்தாங்க. ஒரு நூறு அடிக்குள்ளே தண்ணி வந்திடிச்சு, பக்கத்திலுள்ள காட்டுலே 300 அடி போட்டும் தண்ணி வல்லிங்க.

டி வ:—அது அவரவர்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்திருக்கு கீழ் ஊற்றை யார் கண்டார்கள்.

வே வ:—அந்தக் கேணியை வந்துபாத்து அது புகையிலைக்கு எத்த தண்ணிதானுண்ணு சொல்லணுங்க.

டி வ:—வந்துபார்க்கிறேன்.

வெ வ:—அப்படியே பக்கத்திலே ஒரு எலிமிச்சந்தோட்டம் இருக்குங்க அதுலே ரெண்டு வருசமா காப்பு இல்லிங்க அதையும் பார்க்கணும்.

டி வ:—அப்படியே செய்கிறேன்

[சில ரயத்துக்கள் வந்து உட்காருகிறார்கள்]

டி வ:—இந்த கிராமத்திலே நவீன முறைகளில் போடப்படிருக்கும் பயிர்களை சுற்றிப்பார்க்க விவசாய டிப்டி டைரெக்டர் அவர்கள் இன்றைக்கு வருகிறார்கள் அவர்கள் இப்பொழுது வரும் சமயா். (மெசஞ்சர் வருகிறான்)

மெ வ:—துரை கார் வந்துட்டுதுங்க.

டி வ:—துரை அதோ வருகிறார், நான் போய் அழைத்து வருகிறேன். (முன்னால் டிமான்ஸ்ட்ரேடர் போய் டைரெக்டரை சந்திக்கிறார்.)

டி வ:—Good morning Sir,

துரை வ:—Well demonstrater what have you got to be inspected in this Village this time?

டி வ:—I am glad to inform the Deputy Director that several ryots in the village have adopted the Departmental recommendations

து வ:—Really! that is good. The department is striving only for such a realization.

டி வ:—I have gatheared some of the leading ryots of the village in the local chavadi and they want to meet the Deputy Director. Will you like to go over there Sir?

து வ:—Certainly, shall we go there then?

டி வ:—Yes Sir.

(இருவரும் சாவடிக்குள் போகிறார்கள். ரயத்துக்கள் எழுந்து நிற்க, பொன்னன் துரைக்கு மாலே போடுகிறான்.)

து வ:—எல்லோரும் உட்காரவேண்டும்.

[அனைவரும் உட்காருகிறார்கள்.]

து வ:—[டிமான்ஸ்ட்ரேடரை காட்டி] உங்களுக்கு இவர் வந்து விவசாய முறைகளைப்பற்றி புதிய வழிகள் சொல்லி

யிருப்பாரே நீங்கள் ஏதாவது செய்துபார்த்தீர்களா?

1வது ர-வ:—நான் நெல்லு போட்டு இருக்கேங்க.

து வ:—[டிமான்ஸ்ட்ரேடரை பார்த்து] what are the strains you have distributed here?

டி வ:—I have given here Adt 2, Adt 3, Co 2, & Co 3 strains Sir.

து வ:—நெல்லு எப்படி இருக்கு.

1வது ர-வ:—கருது ஒண்ணுபோலே வாங்கி, மணி நல்லா புடிச்சிருக்குங்க.

2வது ர-வ:—இந்த வடந்தைக்கு பயப்படல்லே. எங்க நெல்லு குந்திப் போச்சு இது தூரு நல்லா கட்டிருக்குங்க.

3வது ர-வ:—அது என்னமோ எசமாங்களே, எனக்கு, பிந்தின பட்டத்துக்காவ, பூம்பாளை நெல்லுண்ணு, ஒருதினுசு குடுத்தாங்க. அதே நட்டேன் பாருங்க தாளா நின்னுபோச்சுங்க, கருதே வாங்கல்லே.

து வ:—[டிமான்ஸ்ட்ரேடரை பார்த்து] How do you explain the phenomenon?

பொ வ:—இதெப்பத்தியா அவுங்களே கேக்குரீங்க? அதுக்கு காரணம் நான் சொல்ரேன். அந்த நெல்லெ அவுங்க கார்த்திகை மாசம் நடச்சொன்னாங்க. இவுரு அதெ கவனிக்காமே, தைமாசத்துலே கொண்டு நட்டாரு. அதனாலேதான் அது கருது வாங்காமே நின்னுபோச்சு. இதெத்தான் அவுங்க திருப்பித் திருப்பி சொல்லிட்டுப் போனாங்க, இந்த ஆளு அதெ காதிலே வாங்கிக்கலிங்க.

3வது ர-வ:—ஆமாங்க அது தெரிஞ்சுக்கிட்டேங்க.

து வ:—பார்த்தீர்களா—இதிலிருந்து நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், புதிய முறைகளை நீங்கள் அனுசரிக்கும் பொழுது, டிமான்ஸ்ட்ரேடர் சொல்வதை கவனித்து, அதன்படி நடக்கவேண்டும். அந்த வழிகளை சரியாக செய்யாவிட்டால், நீங்களும் ஏமாற்றமடைந்து, நஷ்டத்திற்குள்ளாவீர்கள்—டிபார்ட்டுமெண்ட் பேரிலும் அவநம்பிக்கை உங்களுக்கு உண்டாகும்.

3வது நான் செய்தது தப்புதானுங்க— என் கவனக்குறைவு தான்—இப்படியாச்சுங்க.

தி வ:— இரும்புக் கலப்பையை யாராவது உழுது பார்த்திருக்கிறீர்களா?

1வது ர-வ:—நான் உழுது பார்த்தேங்க அதுலே எனக்கு ரெண்டு ஓளவு லா வந்தாங்க இந்த வருசம் மழையில்லாத்துக்கு நம்ப பயிர் பச்சை மாறலிங்க. பூமி ஈரந்தாங்குது. களை வெட்டுக்கூட கொஞ்சம் கம்மிதாங்க

2வது ர-வ.—ஸ்வாமி! இந்த முருவனுடைய விளாங்காட்டுலே என்ன எருப்போட்டும் பயிரு புடிக்காமலே யிருந்தது இவுங்க (டிமான்ஸ்ட்ரேடரைக் காட்டி) அந்த மண்ணை எடுத்து கோயப்புத்தூருக்கு அனுப்புச்சாங்க, அப்புரம் ஒரு உறம் கொண்டாந்து போட்டாங்க இப்போ பயிர் நல்லா வருதுங்க.

து வ:—(டிமான்ஸ்ட்ரேடரைப்பாாத்து) what was defective in the soil ?

டி வ:—the analysis of the soil sample sent to Coimbatore showed poor lime content. So lime was applied to the soil.

து வ:—நீங்கள் சல்பேட் எருப்போட்டுப் பார்த்தீர்களா ?

பொ வ:—நான் போட்டுப்பாத்தேங்க. அவுங்க சொன்னமாதிரி இந்த சீமை எருவெல்லாம் நாட்டு உரத்தோடு கலந்து புகயிலேக்கும் கரும்புக்கும் வச்சேனுங்க பயிர் குத்த மில்லிங்க.

1வது ர-வ:—சாமி! இந்த விவசாயப் பஞ்சாங்கத்துலே என்னமோ சோளக்கரும்பு ஒட்டு தினுசுண்ணு போட்டு இருந்து துங்களே அந்த விதை கொஞ்சம் வேணுங்க.

து வ:—அதன் பரிசிலனை இன்னும் பூராவும் முடியவில்லை. அதற்குப்பிறகு அந்தக் கருப்பு கொடுக்கப்படும்.

2வது ர-வ:—எஜமாங்களே! ஒங்களே ஒண்ணு கேக்கணும்ணு இருக் கேங்க. எங்களுக்கு முதலிலே சருக்காருலே இந்த மாதிரி குடிகளுக்கு சௌரியங்க பண்ணராங்கண்ணு தெரியாது. ஒரு நாளைக்கு நாங்கள் இப்படிக் குந்தி பேசிக்கிட்டு இருந்தோம். அப்போ இந்த விவசாய இன்ஸ்பெக்டர் வந்தாரு, நாங்கள் ஆரோன்னு நினைச் சுக்கிட்டு சரியாகூட கவனிக்கல்லேங்க. அப்புரம் அவுங்க சொல்லித்தான் எங்களுக்கு இந்த புது வளி யெல்லாந் தெரிஞ்சுதுங்க. இப்போ அவுங்களே இந்த ஊரு கொளந்தைகளுக்குக் கூட தெரியுங்க.

து வ:—ரொம்ப சந்தோஷம். உங்களுடைய முன்னேற்றத்திற் காகவே டிமான்ஸ்ட்ரேடர் இங்கிருக்கிறார். நீங்கள் வேறு என்னமோ கேட்க ஆரம்பித்தீர்களே அதைச் சொல்லுங்கள்,

2வது ர-வ:—நீங்கள் சொல்லரது எல்லாம் நல்லா இருக்குங்க. இந்த பருத்திச் செடியை என்னுத்துக்கு புடுங்கச்சொல்லு றிங்க. எங்க ஊருலேதான் பூச்சி ஒண்ணும் விளலியே.

து வ.—பூச்சி வந்த பிறகு போக்குவதைவிட, பூச்சிவராமல் தடுப்பது நல்லதில்லையா.

2வது ர-வ:—ஆமாங்க.

து வ:—இதுமட்டும் அல்ல. ஒவ்வொரு வருஷமும் பருத்தி புதிதாகப் போட்டால், பஞ்சு நன்றாயிருக்கும் உங்க ளுக்கு ஜாஸ்தி விலையும் கிடைக்கும்.

2வது ர-வ:—அதுக்குதான் கேட்டுக்கிட்டேங்க.

து வ:—நான் இவிடம் விட்டுப்போவதற்குமுன் உங்களுக்கு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் உங் கள் கிராம விவசாய முன்னேற்றத்திற்காக செய்திருக் கும் வேலைகள் எனக்கு மிகவும் திருப்திகரமாகயிருக் கிறது இதற்கு உங்கள் கிராம ஒற்றுமையும், ஊக்க மும், விடா முயற்சியுமே காரணம். தன் கையே தனக்குதவியாகையால் கலிகாலத்தின் கொடுமையையும், சர்க்கார் சிரத்தை எடுத்துக்கொண்டு ஒன்றும் செய்ய வில்லை என்பதையும், காரணங்களாக வைத்துக்கொண்டு சும்மா இருப்பது சரியல்ல. நீங்கள் இந்த ஊரில் முக்கியமான விவசாயிகளைச் சேர்த்து ஒரு ஐக்ய விவசாய சங்கம் ஆரம்பிக்கவேண்டும். இதற்கு சொந்த சாகுபடி யில்லாத மிராசுதார்களையும், வக்கீல்களையும் சேர்ப்பது சிலாக்கியமல்ல. ஏனென்றால் சங்க முன் னேற்றத்துக்கு உழைக்க இவர்களுக்கு போதுமான சாவகாசம் ஏற்படாது. இந்த சங்கம் அநேக டிமான் ஸ்ட்ரேடர்கள் செய்யக்கூடிய ப்ரசார வேலையை செய் யும். இந்த சங்கத்தினால் அதிக முதல் இல்லாத குடி யானவனும், நவீன முறைகளில் விவசாயத் தொழில் செய்யலாம். தற்போதைக்கு சுமார் 10 ஏகர் நிலம் குத்தகைக்கெடுத்து. ஒரு நிரூபணைப் பண்ணை வைக் கலாம். சர்க்கார் பண்ணையில் பயிர்ச்சியடைந்த கூலி யாட்கள் இதில் வேலை செய்யலாம். கிராமக் கால் நடைகளின் முன்னேற்றத்திற்காக 2 பொலி காளைகள் வைத்துக்கொள்ளலாம். உங்கள் சங்கத்தின்கீழ், உங்கள் ஊர் மாரியம்மன் திருவிழாவின் போது ஒரு விவசாயக் கைத்தொழில் காக்ஷி ஒன்று நடத்தலாம். விவசாயத்

திற்கு ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடம் வைத்துக்கொடுக்க லாம். சங்க மெம்பர்கள் உபயோகத்திற்கு ஒரு பத்தி ரிகை ஒன்று நடத்த ஏற்பாடு செய்யலாம்.

பொ வ:—நீங்க சொல்ரதெல்லாம் நல்லா கவனிச்சு கேட் டுக்கிட்டோங்க. நாங்க, சங்கம் ஆரம்பிக்க ஏற்பாடு செய்ரோம்.

து வ:—நான் போய்வருகிறேன்.

(எல்லோரும் வணங்கிக்கொண்டு)

எல்லோரும் வ:—போயிட்டு வாங்க. (துரை, டிமான்ஸ்ட்ரேடர். மெசஞ்சர் போகிறார்கள்.)

1வது ர-வ:—ரொம்ப நல்ல தொரை. என்ன சாந்தமா பேசராரு.

2வது ர-வ:—ஆமாம்! சந்தோசமா பேசுராங்கோ. சரிபோவலாம் வாங்க. (எல்லோரும் போகிறார்கள்.)

---

## களம் 2. அங்கம் 4.

இடம்:—பட்டணம் தனபாலன் வீடு.
காலம்:—காலை 9 மணி
பாத்திரங்கள்:—சுலோசனா, ராஜி, தனம், ராதா, கமலம்.

[சுலோசனா ஹிந்து பத்திரிகையை வாசித்துக்கொண்டிருக்கிறாள். சேவகன் வருகிறான்.]

சேவகன்:—அம்மா நேற்றுவந்துட்டுப் போனாங்களே, அவுங்களும் இன்னும் இரண்டு பேரும் காரிலே வந்திருக்காங்க.

சுலோ:—ராஜியும் மற்ற மாதர் சங்க மெம்பர்களும் வந்திருக்கக் கூடும் சரி—உள்ளே வரச்சொல்லு.

[ராஜி, தனம், கமலம், ராதா வருகிறார்கள்.]

சு:—Hullo! come in. நீங்கள் இவ்வளவு சீக்கிரம் வருவீர் கள் என்று எதிர் பாரக்கவில்லை.

ராஜி:—Circularல் 9 மணிக்கு மீட்டிங் என்று எழுதியிருந் ததே—

சு:—(Looks at the watch) இன்னும் மணி 9 ஆகவில்லை. does not matter—please all take your seats. We shall sit to work now.

கமலம் வ:—சரோஜினிதேவி இந்நகருக்கு வருவதைப்பற்றி இன்றைய பேப்பரிலும் போட்டிருக்கிறது. Leader column-லும் ஒரு reference இருக்கு. பார்த்தீர்களா?

சு வ:—ஆம் பார்த்தேன்—சென்ற கமிட்டி மீட்டிங்கில் pass ஆனபடி அவர்களுக்கு ஒரு fitting reception நம் மாதர் சங்கத்தில் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ராதா வ:—வரவேற்புப் பத்திரிகையும் நாம் அச்சமயம் கொண்டு வரவேண்டிய தீர்மானங்களும் draft ஆய்விட்டதா?

சு வ:—என்ன தனம் நான் சொன்ன வழிகளில் இவைகளை draft பண்ணியாச்சா?

தனம் வ:—ஏதோ ஒருவிதமாய் rough ஆய் போட்டிருக்கிறேன். நீங்க சொன்னதுமல்லாமல் இன்னும் சில points-களும் சேர்க்கவேணுமென்று தோன்றுகிறது.

ராஜி வ:—இப்பொழுது என்னென்ன subject-ல் தீர்மானங்கள் போட்டிருக்கிறீர்கள்.

தனம் வ:—பெண் கல்வி சம்பந்தமாயும், குழந்தைகளின் பாதுகாப்பு, மாதர்களின் ஒட்டுருமை, இவைகளைப்பற்றித்தான் தீர்மானங்கள் போட்டிருக்கிறேன்.

சு வ:—வேறு எந்த points-ஐப்பற்றி சொன்னாய்,

தனம் வ:—நமது சங்கம், இதுவரை தீண்டாமை விஷயமாக...

கமலம் வ:—You mean we have not given any lead to the public till now.

தனம் வ:—exactly — அதைப்பற்றி என் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறேன்.

## பாட்டு. ஆழ்ந்தயோஜனை—என்ற மெட்டு

சற்றும் ஒழியாத் தொல்லையே
சாதிச் சண்டையே (ச)

போற்றிடும் பாரத மாதா புத்திரரில் பேதமேது
முற்றும் உணர நெஞ்சமே
மூண்டால் அஞ்சுமே (ச)

(தோகையரு)

ஆதியில் இந்நாட்டில் ஆரியர்கள் வாழ்ந்தனர்
அணுவளவும் பேதம் இன்றி
சோதிபெரு நாத னருளால் வந்த நாமெல்லாம்
சோதரரே என்றிருந்தார்.

(பாட்டு)

பாதியிலே வந்து சிலர் போதனைகள் செய்ததாலே
ஆதி நிலையை மாற்றினர்
அது முதலே (ச)

(தொகையறு)

மாசற்ற இந் நாட்டு மக்களின் மனதையே
மாறுபட செய்த பழியே
தேசத்தைவிட்டு இத் தீண்டாமை யொழியவே
தேடவும் வேண்டும் வழியே

(பாட்டு)

தக்க பரிகாரம் செய்ய தாமதமே செய்தாலின்னம்
மிக்க விரோதம் ஓங்குமே
மீண்டும் எங்குமே (ச)

(தொகையறு)

சட்ட சபையுடன் மாதர் சங்கமும் சிந்தித்து
சமத்துவம் என்ற நிலையை
திட்டமுடனே எந்த தருணமும் செய்யவே
தீர்மானம் ஒன்று வேண்டும் (ச)

தன வ:—பிறப்பினல் ஒருவனுக்கு உயர்வு தாழ்வு ஏற்பட முடியாது—எங்கள் மதக்கொள்கையின்படி எல்லோரும் ஒரே தாய் தந்தையருக்கு பிறந்த சகோதர சகோதரிகளே:

ராதா வ:—ஏன் நமது தேச சரித்திரத்தின்படியும் அது உண்மையே. ஆதியில் இந்த ஜாதிப்பிரிவினைகள் கிடையாது. பிற்காலத்தில் division of labour-க்காகவே இவைகள் உண்டாக்கப்பட்டன.

சு வ:—அதெற்கென்ன—இந்த தீண்டாமை, மனிதனல் ஏற்படுத்திக்கொண்டது. ஆகையால் இதைப்பற்றி கட்டாயம் ஓர் தீர்மானம் கொண்டுவரவேணும்.

ராதா வ:—இதைவிட முக்கியமான இன்னொரு விஷயத்தைப்பற்றி நான் பேச விரும்புகிறேன்—
Even as untouchability widowhood also is a curse to India—

ராஜி வ:—I agree with you (Striking the table with the palm of her hand)

க வ:—Yes re-marriage of widows—especially that of virgin widows-ஐபற்றிய விஷயத்தையும agenda-வில் சேர்த்துக்கொள்ளலாம்.

தன வ:—அது அவசியமே—மறுபடியும் கலியாணம் செய்து கொள்ளும் உரிமை ஒரு widower-க்கு இருக்கும் பொழுது, widow-க்கு ஏன் கொடுக்கக்கூடாது? ஒரு புருஷன் எவ்விதமும் வேலைசெய்து பிழைத்துக்கொள்ள லாம். ஆனால் கணவனை இழந்த இளங்கைம்பெண் என்ன செய்வாள்? தாய் தகப்பன் இருந்தால் பரவா இல்லை—இல்லாவிட்டால் அவள் கதி என்ன ஆகிறது.

சு வ:—இதைப்பற்றி ஒரு resolution போடலாம்.

கமலம் வ:—சாரதா சட்ட விஷயமாக, விவாக வயதை 18 ஆக்க வேண்டுமென்றும், விவாக ரத்து மசோதாவை, கண்டித்தும் தீர்மானங்கள் கொண்டுவரவேண்டும்.

ராஜி வ:—சாரதா ஆக்டை நான் ஒப்புகொள்கிறேன்—ஆனால் இந்த divorce ஐப்பற்றி—அது எனக்கு வேணு மென்றுதான் தோன்றுகிறது.

இப்பொழுது. ஒரு பெண்ணிற்கு விவாகம் ஆனபிறகு, தன் புருஷன் கெட்ட நடத்தை உடையவன் என்று தெரியவருகிறது. அவள் அவனிடம் எத்தனை நாள் தான் துன்பப்பட்டுக் கொண்டிருக்க முடியும்—ஆகை யால் இந்நிலைமையில், divorce மிகவும் அவசியமே.

தனம் வ:—I emphatically protest against this sort of reasoning—ராஜி—இது எப்படி யம்மா—உன் மூளை யிலே நுழைஞ்சுது—கிருஸ்து மதக்கொள்கையின் பிர காரம், ஒருத்தி ஒருவனை தன் புருஷனாக, ஏற்றுக் கொண்டு, மரணபரியந்தம், இருவரும் இணைபிரியாம லிருப்பதாக குருவின் சமுகத்திலும். கோவில் நிறையக் கூடியிருந்த ஜனங்கள் முன்னிலையிலும், வாக்களித்த பிற்பாடு பிரிவதென்றால் சாமான்யமான காரியமல்ல. மனைவி புருஷனைத் தள்ளிவைத்து வேறொருவனைக் கலி யாணம் செய்தாலும் புருஷன் மனைவியை தள்ளிவிட்டு. வேறொருத்தியை கலியாணம் செய்தாலும், அவ்விரண் டும் விவசாரமே யாகும்.

ராதா வ:—அப்படி divorce என்று ஏற்பட்டுவிட்டால், வேறு கலியாணம் ஆன பிறகு, முதற்பிறந்த குழந்தைகளின் கதி என்ன ?

சு வ:—ஹிந்துமதத்திலும் அக்னி சாட்சியாக, ஓமம் வளர்த்து விவாகம் நடக்கிறது—ஆகையால், நாம் கொடுத்த வாக்கினின்றும் விலகக்கூடாது. ஆகிறதும் பெண்ணாலே, அழிகிறதும் பெண்ணாலே—விவாகரத்து ஏற்பட்டுவிட்டால், குடும்பங்கள் ஏது? நாகரீகம் ஏது? எல்லாம் அழியும்—இதைக் கண்டித்து ஓர் தீர்மானம் கொண்டு வரலாம்.

தனம் வ:—நாம் அநேகமாய் எல்லா விஷயங்களையும் பேசிவிட்டோம். இன்னும் ஒன்று பாக்கியிருக்கிறது.

பாட்டு. அன்பின் மிகுந்த—என்ற மெட்டு

பாரினிலே கொலை பாதகமே—நாளும்
பாங்குடன் செய்தாலே தோதகமே
நேரினில் மாதர்கள் சங்கமுமே—அதை
நீக்கமுறை செய்தல் நன்றாகுமே (பா)

கர்ப்பத்தடை செய்தால் கேடல்லவோ—ஜீவன்
உற்பத்தியாகும் உயிர் கொல்லவோ
விர்ப்பனர் செய்யும் வினையல்லவோ—இது
சொர்ப்பனத்தும் கேளா சூதல்லவோ (பா)

வ:—மனிதன் இயற்கைக்கு விரோதமாக நடந்தால் அதற்குண்டான தண்டனையை அடைந்தே தீரவேண்டும். Survival of the fittest என்ற theory-படி கடவுளே இவ்வுலகின் ஜனத்தொகையை சரியான நிலையில் வைத்துக்கொண்டு வருகிறார். ஆக்குவதும் அழிப்பதும் அவனுக்கே உரியது. காலக்கிரமத்தில் ஏற்படும் வியாதிகளும் சண்டைகளுமே—ஜனத் தொகையை சரியான விகிதப்படி குறைக்க போதுமானவைகளாயிருக்கின்றன ஆகையால் தற்போது வெளியில் செய்துகொண்டு வரப்படும் கர்ப்பத்தடை பிரசாரங்களை, இயற்கைக்கு விரோதமென எதிர்த்து பலமாக வாதிக்கவேண்டும்.

கமலம் வ:—Italy, France, Germany முதலிய தேசங்களில் கர்ப்பத்தடை முறைகள் ஜாஸ்தியாய் கையாண்டு வரப்படுவதால், ஜனத்தொகை குறைவது கண்டு சர்க்கார் சரியான விவாகங்களுக்கும், குழந்தை உற்பத்திக்கும், பரிசளிக்கும்படியான நிலைமையில் வந்திருக்கிறது.

ராதா வ:—அப்படியா? இந்நிலைமை இந்தியாவிற்கு வரவே வேண்டாம்.

சு வ.—நாம் இவ்விஷயங்களை நாளைய மீட்டிங்கில் சரோஜினி தேவி முன்னிலையில், பேசி, தீர்மானங்கள் கொண்டு வந்து, ப்ரசாரங்கள் செய்ய ஏற்பாடு செய்யலாம்.
என்ன—தனம்—நாளைய function-க்கு, invitation letters எல்லாம் அனுப்பியாச்சா, மாலை முதலியவை தயாராக இருக்கின்றனவா?

தனம் வ:—அதைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம் நான் பார்த்துக்கொள்கிறேன். தாங்கள் சென்னைக்கு வந்த பிற்பாடுதான், இம்மாதர் சங்கங்கள் ஏற்பட்டு, இவ்வளவு முன்னுக்கு வந்திருக்கின்றன. இதற்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப்போகிறோம்.

சு வ:—I do not deserve these compliments at all. இது எல்லாம் நமது duty தானே.

கமலம் வ:—அப்போ—it is getting late—We will take leave.

சு வ:—Oh no! you should have some drinks before we part

தனம் வ:—No. thanks! We had them just before our arrival here.

சு வ:—சரி, போய் வாருங்கள். [எல்லோரும் போகிறார்கள்.]

---

## களம் 3. அங்கம் 1.

இடம்:—பட்டணம் தனபாலன் மாளிகை.
காலம்:—காலை 1 மணி
பாத்திரங்கள்:—தனபாலன், சுலோசனா, முருகன்.
[தனபாலன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு)

த வ:—ஆ! தெய்வமே!! நான் எதிர்பாராதவிதமாய் எனக்கு நஷ்டங்கள் வந்துவிட்டன. என் கஷ்டங்களை நான் யாரிடம் போய் சொல்லுவேன்.

பாட்டு. தஞ்சமென்றிருந்தேன்—என்றமெட்டு.

சொந்தயிடம் தன்னைவிட்டு
சோதனைக்கோ இங்குவந்தேன்
இந்தவித மாகநஷ்டம்
வந்ததற்கே நான் என்செய்வேன் (சொ)

வ:—இவ்வித கஷ்டங்களுக்கு நடுவில் ஏஜண்டிடமிருந்து வந்திருக்கும் கடிதத்தைப்பார்த்தால் புண்ணில் கோலிட்டதுபோலிருக்கிறது.

[மேஜையின் மீது இருந்த கடிதத்தை வாசிக்கிறான்.]

"ஏஜமான் அவர்களுக்கு ஏஜண்டு தண்டம் சமர்ப்பி எழுதிக்கொண்டது. ஊரில் மழையில்லாததால், குளத்தில் ஜலம் குறைந்துவிட்டது. தண்ணீர் இருந்தாலும் பாய்ச்சுவதற்கு உண்டான நிலைமையில் இல்லை. பயிர் காய்ந்துகொண்டுவருகிறது. இந்த வருஷம் ஒன்றுக்கு பாதிதான் மாசூல் கிடைக்கும் போலிருக்கிறது. இந்த விஷயம் தெரிவித்துக்கொண்டேன்."

(கடிதத்தை வீசி எறிந்துவிட்டு.)

வ:—என்ன அநியாயம்! இப்பொழுது வந்திருக்கும் நஷ்டத்தில் தனக்கு ஒருவிதமான சம்மந்தமும் இல்லாதது போல் எழுதப்பட்டிருக்கிறது. ஆமாம்! முருகன் சொன்னது வாஸ்தவமே. அப்போதே கிராமத்தை விட்டுப்போவதை தடுத்துச் சொன்னான். சொந்தக்காரன் மூச்சுக்காற்றுதான் பயிறுக்கு நல்ல உரம் என்றும், பாராதே கெட்டது பயிர் என்றும் பலவிதமாய் எடுத்துச்சொன்னான். ஆனால் என் மனைவி அவனை பேசவிடவில்லை. நினைத்ததையே சாதித்தாள். அதனால் வந்த நஷ்டங்களல்லவா இது?

பாட்டு. ஷை மெட்டு

விந்தையாக என் மனைவி
விரும்பியதா • லின்னகர்க்கே
வந்ததாலே வேண பொருள்
வாதனையால் போச்சுதையோ.

த சு:—என் மனைவி சொற்கேட்டு நான் இங்கே வந்தது தவறு "வக்கீலை நம்பமுடியாது. இங்கு வந்து வேண்டிய பிரயத்தனம் செய்தால்தான் கேஸ் ஜெயிக்கும்" என்று சொன்னாள். இவ்வளவு பணம் செலவழிந்தும், கேஸ் தோற்றுப்போய்விட்டது. ஆயிரக்கணக்காக செலவழித்ததில் எனக்குக் கிடைத்தது கத்தை கத்தையாக இந்தக் காகிதக் கட்டுகள்தான். வேறொன்றும் பலனைக் காணவில்லை.

த. பாட்டு ஷை மெட்டு

பாடு பட்டு த்தேடும் பொருள்
போக வழி யேகமுண்டு
நாடி டிலோ நன்னகரை
நானடைந்த நாட்டம் கொண்டு (சொ)

த வ:—நான் கிராமவாசத்திலிருந்த பொழுது இருந்த மனச் சாந்தி இப்பொழுது எங்கேயோ போய்விட்டது நான் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். என் மனசஞ்சலங்கள் என்னோடு இருக்கின்றன. என் மனைவி இவை ஒன்றையும் அறியாமலிருக்கிறாள்-

[தனபாலன் கேஸ் கட்டுகளை படித்துக் கொண்டிருப்பதுபோலிருக்கிறான்.
சுலோசனை வருகிறாள்.]

சுலோ வ:—நாதா— (தனபாலன், பதில் சொல்லாமல் மெய் மறந்து இருக்கிறான்.)

சு வ:—(ஒருபுறமாய் தனக்குள்) இன்றைக்கு என் புருஷன் முகவாட்டதுடன், உட்கார்ந்திருக்கிறார் நான் கூப் பிட்டதுகூட காதில் விழவில்லை. நான் இதுவரை என் புருஷனை இப்படிப்பட்ட நிலைமையில் பார்த்ததில்லை. எதற்கும் அருகில் சென்று அறிவோம்.

சு வ:—(அருகில் சென்று) நாதா—நாதா—

பாட்டு. மார்க்கத்தில்கண்ட—என்றமெட்டு

வாட்டமுகத்துடன் கேட்டும் கேட்காதுபோல்
ஏட்டைப் பிரட்டு வதென்ன—இந்த
ஏட்டுச் சுரக்காய்க றிக்குதவாதென்ற
பாட்டையுமே மறந்தீரோ

வ:—நாதா இன்று ஏன் முகவாட்டத்துடன் இருக்கிறீர்கள். கூப்பிட கூப்பிடப் பேசவில்லை ஏதாவது கவலை ஏற் பட்டதோ— அல்லது நான் இங்கு வந்தது உங்களுக்கு சற்றும் விருப்பம் இல்லையோ.

தன-பாட்டு. ஷை மெட்டு

காதலியே நான் கவலைகொள்ள இன்று
காரணமேது மில்லை—இந்த
மேதினியில் உன்னைக்கொண்ட எந்தனுக்கு
ஏது வராது தொல்லை.

தன வ:—அப்படி ஒன்றுமில்லையே—நமது சந்தோஷத்திற்கு ஒரு குறைவுமில்லை. அதிலும் உன்னை மனைவியாக அடைந்த பாக்கியம் பெற்ற எனக்கு கவலைக்கிடமேது?

சுலோ வ:—முருகன் நேற்று இராத்திரி ஊரிலிருந்து வந்து விட்டானே.

தன வ:—அப்படியா! ஊரில் என்ன விசேஷம்?

சு வ:—நான் அவனை இன்னும் கேட்கவில்லை.

தன வ:—நீ இப்பொழுது இருக்கும் நிலைமையைப் பார்த்தால். வெளியே போவதற்குத் தயாராகவிருப்பதுபோல் தோன்றுகிறது.

சு வ:—ஆமாம். இன்று மாதர் சங்கத்தில் ஸரோஜினி தேவியாள் பேசப்போகிறார். நான் போய்வருவதில் தங்களுக்கு ஒருவிதமான ஆக்ஷேபணையுமில்லையே? தங்களுக்கு செய்யவேண்டிய வேலை ஏதாவது இருக்கிறதா?

தன வ:—எனக்கும் வக்கீல் வீடுவரையில் போய்வரவேண்டும்.

சுலோ வ:—என்ன காரியமாய்? கேஸ்தான் ஒருவழியாய் முடிந்து விட்டதே?

தன பாட்டு ஷை மெட்டு

1 கோர்ட்டில் வியாஜ்ஜியம் தோற்றாலும் வக்கீல் பீஸ் குறையுமோ
மாமணியே—இன்று
ஏட்டுக்கணக்குப் பார்த்தே கொடுத்திட நான் ஏகவேண்டும் தனியே

2 பி. ஏ. பாஸ்பண்ணின பையனை வேலைக்குப் போகச்சொல்ல
வேண்டுமோ—அன்றி
பேர்பெரும் எம். ஏ. படிக்கவிட வழிபண்ணுதல் நன்றாகுமோ.

தன வ:—ஹைக்கோர்ட்டில் நம்ப கேஸ் விரோதமாகிவிட்டாலும் வக்கீல் பீஸை குறைக்கமாட்டான். வக்கீலிடம் போய் கணக்குத் தீர்த்து பீஸ் பாக்கியைக் கொடுத்துவிட்டு வர வேணும். பையன் பி. ஏ. பாஸ் பண்ணிவிட்டான். அவனுக்கு ஏதாவது வேலை தேடுவதா? அல்லது மேல் படிக்கவைப்பதா? என்று யோஜனை செய்யவேண்டும்.

சுலோ வ:—அதைப்பற்றி நாம் ஏன் விஜாரப்படவேண்டும். ஓரிடத்தில் 3000, 4000 வாங்கிக்கொண்டு கல்யாணத்தை முடித்துவிட்டால் அவனுடைய மாமனாருக்கு அந்தப் பொறுப்பைத் தள்ளிவிடலாம்.

தன வ:—இந்தப் பணம் வந்து நமக்கு என்ன ஆகப்போகிறது கேஸில் பதினுயிரம் ரூபாய்வரை செலவழிந்துவிட்டது. குதிரைப் பந்தயத்தில் அதற்குமேல் போய்விட்டது. மற்றப்படி மாதச்செலவோ நாளுக்கு நாள் ஜாஸ்தியாகிறது. நம்முடைய ஏஜண்டும் ஊரிலிருந்து மாசூல் இல்லை என்று பணம் குறைவாக அனுப்புகிறுன்.

சுலோ வ:—இதற்காக ஏன் வருந்தவேண்டும்?

பாட்டு. ஷை மெட்டு

கிண்டியில் குதிரைப் பந்தயச்சீட்டு விழுந்தால் பணம் ஏராளம் வரும்
சொந்த ஏஜண்டை நியமித்தால் நம்நிலம் கண்டு முதல் தாராளம்.

வ:—நமக்கு அதிர்ஷ்டமிருந்தால் ஒரே நாளில் குதிரைப் பந்தயத்தில் நஷ்டமான பொருள் வந்துவிடும். இந்த ஏஜண்டைத் தள்ளிவிட்டு, நமக்குச் சொந்தமான ஒருவனைப்போட்டால் அவன் நிலங்களை சரியாய்ப்பார்த்துக் கொள்ளுகிறுன். ஆமாம் நாம் வெளி தேசங்களில் போட்ட பங்குகள் என்ன ஆச்சு?

தன. பாட்டு. ஷை மெட்டு

நாயகியே அதைச்சொல்லவே என்மனம் நாணி நடுங்குதடி பணம்
போனதென்றே சொல்ல வேண்டும் ரப்பர் விலை யாகாமல் நின்றதடி.

தன வ:—ஹென்றி போர்டு (Heury Ford) என்ற கோடீசுவரன் அமெரிக்காவிலும், இன்னும் வேறு சிலர் பர்மாவிலும் ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் ரப்பர்த் தோட்டம் வைத்துவிட்டதால் ரப்பர் விலை இறங்கிவிட்டது. அதில் போட்ட பங்குகள் யானை வாயில்போன கரும்புதான்.

சுளோ வ:—அப்படியா போச்சு—ஆபிரிக்கா தேசத்துத் தங்கச் சுரங்கம்?

தன வ:—அதை நினைத்தால் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

பாட்டு. ஷை மெட்டு

தங்கச்சுரங்கமும் வெட்டவிஷப்புகைதான் வெடித்த தன்மேலே—மேலே
பங்கமில்லாமற் செய்த பலர் மாளவே வந்ததே நஷ்டமும் கேளே.

வ:—அந்தத் தங்கச் சுரங்கத்தில் இரண்டாயிரம் அடி வெட்டி முடிந்தது தங்கம் அகப்படுவதற்கு வேண்டிய அடையாளங்களும் கிடைத்தன. அவ்விதம் வேலை நடந்து கொண்டிருக்கையில், ஒரு இடம் வெட்டப்பட்டதும் ஒரு விஷக்காற்றுக் கிளம்பி, எல்லோரையும் கொன்று விட்டதாம். இன்னமும் அந்தக்காற்று மேலெழும்பி அடித்துக்கொண்டிருக்கிறதாம் கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்ற கதையாச்சு.

சுலோ வ:—ஆனால் அந்தக்காற்று நின்றதும் வேலை ஆரம்பிக்கலாமல்லவா ?

தன வ:—அதைப்பற்றி சாவகாசமாய் யோஜிக்கலாம். விஷக்காற்று அடித்துக்கொண்டிருக்கும் வரை நாமும் அதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கலாமல்லவா ?

சு வ:—ஆனால் இவ்விதமான மனசஞ்சலங்களுக்கிடையில் உங்களுக்கு சட்டசபையில் தேர்தலானதைப்பற்றி நினைக்க மனதுக்குக் கொஞ்சம் சந்தோஷத்தைக் கொடுக்கிறது.

தன வ:—நமக்கு சட்டசபையில் தேர்தலானதின் மூலமாக நடந்த விருந்துகளில் சாப்பிட்ட ஆகாரம் இன்னும் பூராவும் ஜீரணமாகவில்லை. அதற்குள் எனக்கு எதிரியாய் தேர்தலில் நின்ற வயிரவஞ் செட்டியார் எலக்ஷன் தகரார் கேஸ் கொடுத்துவிட்டான். ஏராளமான பணம் செலவழித்தால்தான் கேஸ் ஜெயிக்கும்போலிருக்கு.

சுலோ வ:—தாங்கள் அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள்?

தன வ:—நான் அதில் பணம் செலவழிக்கத் தயாராகவில்லை. அது எப்படியானாலும் ஆகட்டும்.

சுலோ வ:—சரி எனக்கு நேரமாகிறது. நான் போய்த்தான் சரோஜனி தேவிக்கு வரவேற்புப் பத்திரிகை வாசிக்கவேண்டும். நான் போய்விட்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன்.

தன வ:—நீ முருகனை வரச்சொல்லிவிட்டுப்போ.

[சுலோசனா கொஞ்சதூரம் போய்
தனக்குள் சொல்லிக்கொள்ளுகிறாள்.]

சுலோ வ.—என் புருஷனுக்கு முகவாட்டமாயிருக்கிறது. உண்மையான காரணம் என்னவென்று அறியவேண்டும். அவருக்கிருக்கும் சொத்திற்கு இப்பொழுது வந்திருக்கும் நஷ்டங்கள் பெரிதல்ல. எதற்கும் அவர் முருகனுடன் பேசுவதை ஒளிந்திருந்து கேட்போம். இப்பொழுது மணி இரண்டுதான் ஆகிறது. சபை மூன்றுக்குத்தான் ஆரம்பம். வேண்டிய நேரம் இருக்கிறது. ஆதலால்

நான் போய் முருகனை வரச்சொல்லிவிட்டு, ஒளிமறை வில் வந்துநிற்போம்.

[உள்ளேசென்று முருகனை வரச்சொல்லி விட்டு ஒருபக்கமாய் வந்துநிற்கிருள்.]

(முருகன் வருகிருன்)

முரு வ:—ஸ்வாமி

தன வ:—ஊரிலிருந்து எப்பொழுது வந்தாய்?

முரு வ:—நேற்று ராத்திரி.

தன வ:—நான் சொன்னதையெல்லாம் பார்த்து அறிந்துவந்தாயா?

முரு வ:—அதை ஏன் கேட்கிறீங்கோ—அந்த விவசாய இன்சுபெக்டரை நேரிலே கண்டு பேசினேன்.

தன வ:—அப்படியா?

முரு வ:—ஆமாங்க—அவுங்க கிராமத்துக்கு வந்துட்டா, ஊரிலுள்ளவங்க எல்லாரும், அவங்களண்டை போயி, வேண்டியதை யெல்லாம் கேட்டுக்கருங்க—பணக்காரர், ஏழை என்று வித்தியாசம் பாராமல், அந்த இன்சுபெக்டர் குடியானவங்கள் நிலத்துக்குப்போயி மருந்தடிக்கிறதோ, அல்லது வேண்டிய எருப்போடுகிறதோ, அல்லது வேறு என்ன வேணுமோ அதையெல்லாம் செய்யராங்கோ. விதைப்பு, உழவு, நடவு முதலியவைகளை புதுவழிகளிலே நிலங்களில் செய்து காட்டுகிருர்கள். நான் போனஅண்ணிக்கு விவசாய துரைகூட வந்திருந்தாங்க.

தன வ:—ஓகோ! Deputy Director of Agriculture-ஆயிருக்கலாம்.

முரு வ:—அவுங்க மற்ற துரைமாதிரி இல்லே. குடிகளண்டே ரொம்ப சந்தோசமாய்ப் பேசுருரு. எங்களுக்கே ஆச்சரியமாயிருந்தது.

தன வ:—என்ன அது?

முரு வ:—நமது தெற்குத்தெரு மருதமுத்துக் கவுண்டன் இல்லையா?

தன வ:—ஆமாம்.

முரு வ:—அவனுக்கு இருக்கிறது இரண்டு ஏக்கர் நிலம்—அறைகூட ஒரு இரும்புக்கலப்பை வாங்கி உழுது, அவரை ஏக்ரா கம்போடியா பருத்தி போட்டிருந்தான். அந்தக் கவுண்டன் துரையண்டே போயி, பருத்தியைப் பாக்கணுமென்று கேட்டுக்கிட்டான். அவன் காடு ஊரிலேயிருந்து கொஞ்சம் எட்டியிருக்கு. அந்த துரை அந்தக்

கவுண்டனைத் தன் மோட்டாரில் ஏத்திக்கிட்டு, இந்தப் பருத்தியைப் போய் பார்த்துவிட்டு, வந்தாரு. எல்லாரும் ஆச்சரியப்பட்டாங்கோ. ரொம்ப நல்லதுரேண்ணு சொல்லிக்கிட்டாங்க

தன வ:—அவர்கள் இவ்விதம் குடியானவர்கள் முன்னேற்றத்திற்காக உழைக்கும்போது, நான் இங்கே உட்கார்ந்திருப்பதை நினைக்க, எனக்கே வெட்கமாயிருக்கிறது. நமது ஏஜண்டைப்பார்த்தாயா?

முரு வ:—பார்த்தேனுங்க. விவசாய இன்சுபெக்டர் கூட அவரைக் கூப்பிட்டுவிட்டாரு. அவரு என்னமோ சாக்குப் போக்கு சொல்லிவிட்டு, வராமல் இருந்துவிட்டார். அவர் நிலத்தை ஒண்ணும் சரியாய் கவனிப்பதில்லே.

தன வ:—குளத்தில் ஜலமில்லை—பயிர் காய்கிறது என்று எனக்கு கடிதம் எழுதியிருக்கிறானே

முரு வ:—குளத்திலே தண்ணி இல்லே என்பது நெசந்தாங்க. ஆனால் அவ்வூரில் சில முக்கியமான குடியானவர்களுக்கு நில அபிவிருத்தி சட்டத்தின் கீழ் அந்த விவசாய இன்சுபெக்டரு சர்க்காரிலே இருந்து கடன் வாங்கிக் கொடுத்து, அந்தப் பணத்துக்குத் தண்ணீர் இறைக்கும் இன்சின்கள் வாங்கப்பட்டிருக்குங்க அதாலே, உள்ள தண்ணியை இறைச்சுக்கிறாங்க. பயிர் பிளைச்சுக்கும் இந்த வருஷம்.

தன வ:—ஏஜண்டு என்ன செய்கிறார்?

முரு வ:—அவர் கூப்பிட்டுவிட்டாக்கூட வரதில்லேயே.

தன வ:—அவனைத் தள்ளிவிட்டு வேறொருவனைப்போட்டால்?

முரு வ:—அவனும் அப்படியேதான் செய்வானுங்க எசமாங்க ஊருக்குப்போய் நிலபலங்களை பாத்துக்கொண்டு இருப்பதுதான் நல்லதுங்க.

தன வ:—நானும் அவ்விதந்தான் யோஜிக்கிறேன். எதற்கும் அம்மாவைக் கேட்டுக்கொண்டு சொல்லுகிறேன்.

முரு வ:—இன்னுமா........அம்மாளே........நான் வரேங்க.

[முருகன் போகிறான்]

தன வ:—(தனக்குள்).

நான் எதிர்பாராத விதமாய் பலவிதங்களில் நஷ்டங்கள் வந்துவிட்டன. என் மனைவி சொற்கேட்டு, நான் இங்கு வந்தது தவறு. ஆதியில் முருகன் சொன்ன வார்த்தைகளை, அவள் தடுத்துப்பேசி, தான் நினைத்ததைச் சாதித்துக்கொண்டாள். அதனாலே வந்த துன்

பங்களல்லவா இவை—ஆனல் அவள்மீது இப்போது குற்றம் சாற்றுவதில் பயனென்ன! எல்லாம் காலபலன் யாரைவிட்டது. இப்பொழுதோ நிலத்திற்கு விலையில்லை. விளைந்த மாசூலை விற்பதற்கும் வசதிகள் இல்லை. பட்டணவாசத்தினல் உண்டான செலவுகளோ மேன்மேலும் அதிகரித்துக்கொண்டே யிருக்கிறது. இவ்விதம் கொஞ்சகாலமிருந்தால், பாப்பராய்ப் போய்விடுவது நிச்சயம். இந்நிலைமையை என் மனைவியிடம் எப்படிச் சொல்வது என்றுதான் யோஜிக்கிறேன்.

[சுலோசன ஒளிமறைவிலிருந்து வருகிருள்]

சுலோ வ:—ஹா—நாதா.

பாட்டு. பண்டித மோதிலால்—என்றமெட்டு

வாட்டமுற்ற என்கணவா
வகையறிந்தேனே—பெரும் (வா)

1 நாட்டைவிட்டு வந்தால் தொல்லை
நாடுமென்று சொன்ன சொல்லை
தட்டிவந்த தால் விளைந்ததே
பெருஞ்சள்ளை (வா)

2 நாயகரின் சொற்கேளாத
நாரியர்களின் நிலைமை
ஞாயமில்லை என் பதை நான்
நன்கறிந்தேனே (வா)

3 பெண்ணுருவம் கொண்டயிந்த
பேதையாலே நேர்ந்ததாலே
கண்ணியமாய் வாழ உங்கள் கருத்தைநாடினேன் (வா)

சுலோ வ:—நாதா! நீங்கள் ஒன்றும் யோஜிக்கவேண்டாம். உங்கள் முகவாட்டத்திலிருந்து, நீங்கள் ஏதோவொன்றை மறைக்கிறீர்கள் என்று சந்தேஹித்து ஒளிமறைவிலிருந்து எல்லாம் கேட்டு அறிந்துகொண்டேன். பெண்புத்தி பின்புத்தியே என்னுடைய பேதைமையினல்தான் இவ்வளவு கஷ்டங்களும் வந்தன.

தன வ:—கண்ணே! வருந்தாதே—நான் எதிர்பாராமல் நீ எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு பேசுவது எனக்கு மிகவும் சந்தோஷத்தைக்கொடுக்கிறது.

சுலோ வ.—நாதா—இப்பொழுது என் மனநோக்கம் மாறிவிட்டது. நாம் மறுபடியும் கிராமத்திற்குப் போவதைத் தவிற வேறென்றையும் இனி நினைக்கப்போவதில்லை.

தன வ:—உன் வார்த்தைகளைக்கேட்டதும் எனக்குப் போன செல்வம் திருப்பி வந்துவிட்டது போலிருக்கிறது. நாம் மனமொத்திருந்தால் நமக்கு ஒரு குறைவும் வராது.

சுலோ வ:—நாம் நாளைக்கே இவ்வூரைவிட்டுப் போகலாமென்று யோஜிக்கிறேன். ஆகையால் நாம் இப்பொழுதே இவ்வூர் சிநேகிதர்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்வோம்.

தன வ:—சரி அப்படியே செய்வோம். மீட்டிங்கிற்கு ஏற்கனவே நீ ஒப்புக்கொண்டுவிட்டபடியால், நீ போய்விட்டு வந்து விடு.

சுலோ வ:—இப்போது என்மனம் போகும்படியான நிலைமையில் இல்லை. நான் தேக அசௌக்கியம் என்று லெட்டர் அனுப்பிவிடுகிறேன். வாருங்கள் போகலாம்.

---

## களம் 3. அங்கம் 2.

இடம்:—டிமான்ஸ்ட்ரேடர் பிரதான ஸ்தானம்.
காலம்:—காலை 8 மணி
பாத்திரங்கள்:—டிமான்ஸ்ட்ரேடர்.

டிமான்ஸ்ட்ரேடர் வருகிறார்.

டி வ:—"தெய்வத்துக்கு செய்வதும் (செய்க்குரம் போடுவதும்) பழுதல்ல" எல்லா எருவகைகளிலும் மாட்டுத்தொழு எருவே மிகவும் மேன்மையானது. அதிலும் கால் நடைகள் விடும் நீர்தான் முக்கியமான அம்சம்.

பாட்டு. செந்தமிழுலகினில்—என்றமெட்டு

முக்கியமாக எருவை முறையுடன் சேகரிக்க
தக்கவழியைத் தானறிவீர்—தருணமதில்
பக்குவ மதையே புரிவீர்

மாட்டுச்சாணியுடன் மூத்திரந் தன்னையே
காட்டாமல் வெய்யலில் கூட்டிடமுன்னையே
எருக்குழி ஒன்று வெட்டுவீர் நிதம் அதனில்
பொருக்கி எருவைக் கொட்டுவீர்.

வ:—சாணி எருவையும் நீரையும், வெய்யில், காற்று, மழை இவைகள் அடித்து சத்துக் குறைவுபடாமல் காத்துக் கொள்ளவேண்டும்.

பாட்டு. ஷை மெட்டு

நெல்லுக்குப் பசுந்தாளும் கேர்கரும்பில் பிண்ணுக்கும்
நல்லபலந்தரும் உரம் சாணி மூத்திரம்
எல்லாம் தோட்டப் பயிர்க்குரம்

நாட்டெருவோடு ர—சாயன எருவை
போட்டு பயோகித்தல்—புதிய நன்முறையே
நாளும் செய்தால் எவருமே— நன்ருய் செழித்து
தாளும் ஓங்கிவளருமே

வ:—அதற்கு அடுத்தபடியாக பிண்ணுக்கு எலும்புத்தூள் உரங்கள் பயிர்களுக்கு அவசியம். நமது நாட்டின் மண்களில் தசைப்பொருள் (organic matter) தழைச்சத்து. தானியசத்து இவை முறையே குறைவுபட்டிருக்கின்றன. இதை நீக்குவதற்கு வேண்டிய வழிகளை நாம் யோசிக்கவேண்டும். நம் நிலங்களுக்கு பூராவும் வேண்டிய சாணி உரத்தில் 25-ல் 1 பங்குதான் இப்பொழுது நமக்கு கால் நடைகளிடமிருந்து கிடைக்கிறது ஆகையால், இத்துடன் நாம் வேண்டிய அளவு பிண்ணுக்கு எலும்பு உரங்களை சேர்த்து உபயோகிக்கவேண்டும். ஆனல், நம் தேசத்தில் 100க்கு 87 பேர் விவசாயிகளாயிருந்தும் வருஷா வருஷம் முப்பத்தொரு கோடி ரூபாய் விலையுள்ள நாட்டு உரங்களை அயல் நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறோம்.

பாட்டு. நாதவிந்துகலாதி—என்றமெட்டு

1 பாரத மாதாவின் பாலர்களில் பெரும்
பாலும் விவசாய சோதரரே நூறு
பங்கில் எண்பத்தேழு பேர்களா மேயிது—நலமாமே

2 கால்நடைக ளிலே மாடுகளின் தொகை
காணப் பதினெட்டுக் கோடியுடன் இன்னும்
தோணும் எழுபது லட்சமேதா னையா—இதுபொய்யா

வ:—நம் இந்தியாவில் பதினெட்டுகோடியே எழுபது லட்சம் மாடுகள் இருக்கின்றன. இவைகளுக்கும் பயிர்களுக்கும் பிண்ணுக்கு அவசியம்.

பாட்டு. 3 எண்ணெய் வித்துகள் எலும்புடன் மீன் எரு
பிண்ணாக்கு முப்பது கோடி ரூபாய் வரை
கண்ணியமாய் அயல்நாட்டுக் கேற்றுமதி—காணுவீரே

4 எண்பத்தாறு லட்சம் ரூபாய் ரசாயன
எருக்கள் அயல்நாட்டிலி ருந்திந்த தேசம்
இறக்குமதி யாகுதென்றே கணக்கெடுத் தியம்புவோம்

வ:—ஒவ்வொரு வருஷமும் சுமார் முப்பதுகோடி ரூபாய் விலையுள்ள பிண்ணாக்கு, எலும்பு, மீன் எருக்களை வெளி தேசங்களுக்கு அனுப்பித்துவிட்டு, நாம் எண்பத்தாறு லட்ச ரூபாய் * விலையுள்ள ரசாயன எருக்களை வருத்துகிறோம். இதனால் தேசத்திற்கு லாபமில்லை.

பாட்டு. 5 இறக்குமதி ஏற்றுமதி சரக்குகள்
இரண்டுக்குமே வரி ஏற்படுத்தி நாமும்
சிறக்கவே நமது தேசத்தொழில்களை—செய்யலாமே

6 யந்திர சாலைகள் எங்கும் நிறுவிட
தந்திரமாய் எலும்புரம் எண்ணெய் முதல்
இந்தியாவில் செய்ய ஏராள லாபமே—இதுவாமே

வ:—இந்தியாவில் இப்பொழுது உண்டாகும் எண்ணெய் விதைகள் நம்மாடுகளுக்குப் போதுமான பிண்ணாக்குக் கொடுக்கும். எலும்பு ஏற்றுமதியை நிறுத்திவிட்டால், எலும்பு சேர்க்கும் ஏழை ஜனங்கள் பிழைப்புப் போய் விடும் என்று நினைப்பது தவறு. எலும்பு ஏற்றுமதிக்கு ஒரு சுங்கவரி போட்டு, அந்தப் பணத்தைக்கொண்டு, ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்தி, எலும்புத்தூள் பண்ணும் யந்திரசாலைகள் வைக்கலாம். இதனால் நம் நாட்டில் எலும்புத்தூள் உபயோகம் ஜாஸ்தியாகும்.

பாட்டு. 7 போட்டிபோடும் அமெரிக்கா மொராக்கோ பி
ரேஸில் மடகாஸ்கர் தேசங்கட்குப் புத்தி
காட்டியாகத் தொழில் விருத்திசெய்து கடைத்—
தேறுவோமே.

வ:—அமெரிக்கா, மொராக்கோ, பிரேஸில், மடகாஸ்கர் முதலிய தேசங்கள் எண்ணெய் விதை வியாபாரத்தில்

---

* In 1929—30. The figures vary every year.

இந்தியாவுடன், போட்டி போடுகின்றன. எண்ணெய் விதை ஏற்றுமதிக்கு ஒரு சுங்கவரி போட்டு, அந்தப் பணத்தைக்கொண்டு, நாமே எண்ணெய் பிழிந்து, அதிலிருந்து செய்யக்கூடிய பொருள்களைத் தயாரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதனால் மற்றைய நாடுகள் நம் எண்ணெய் விதையை வாங்கமாட்டேனென்றால், நாம் அவர்களிடமிருந்து வாங்கும் சோப், மெழுகுவர்த்தி, நெய் செயற்கைவெண்ணெய் (margarine) இவைகளுக்கு வரிபோட்டு, அந்தப் பணத்தைக்கொண்டு, எண்ணெய் விதைக் கைத்தொழில்களை விருத்திசெய்யலாம். நம் உள்நாட்டு உரங்களின் ஏற்றுமதியைப்பற்றி, இன்னும், பல நிபுணர்கள் வாதித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருமுடிவு ஏற்படவில்லை. எதற்கும், இந்த உரங்களை சாஸ்தியாக குடியானவர்கள் உபயோகிக்க. நாம் வேண்டிய பிரசாரங்கள் செய்யவேண்டும்.

[போகிறார்]

---

## களம் 3. அங்கம் 3.

இடம்:—புதுப்பாளையம், தனபாலன் வீடு.

காலம்:—காலை 8 மணி

பாத்திரங்கள்:—தனபாலன். டிமான்ஸ்ட்ரேடர், ஏஜண்டு. முருகன், பொன்னன். குடியானவர்கள் (1, 2, 3.)

(தனபாலன் உட்கார்ந்திருக்கிறான். முருகன், பொன்னன் குடியானவர்கள் வருகிறார்கள்)

பொ வ:—முருகன் வந்து சொன்னான், நீங்கள் ஊருலே இருந்து வந்துட்டீங்கண்ணு வந்துபார்த்துட்டு போவலாண்ணு வந்தோம். ஊட்டுலே அம்மா கொளந்தே எல்லா சவுக்கியந்தானே!

த வ:—நேற்றுதான் வந்தோம். எல்லோரும் சௌக்கியந்தான் உட்காருங்கள். [எல்லோரும் உட்காருகிறார்கள்.]

த வ:—நம்முடைய கிராமம் விவசாய டிபார்ட்மெண்டார் மூலமாய் அபிவிருத்தி அடைந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷம்.

1வது ர-வ:—அவுங்க சொல்ர வளியெல்லாம் குடியானவங்களுக்கு ஏத்ததாயிருக்குங்க.

2வது ர-வ:—அதாலே ரொம்ப சவுரியம் இருக்கு. அப்படி அந்த புது வளியிலே செய்கிறதாலே சாஸ்தி செலவு ஒண்ணும் ஆவுலே.

த வ:—நான் வரும் வழியில் புதிய தினுசு புல்களும், நூதன முறைகளில் விதைத்த பயிர்களையும் பார்த்தேனே.

3வது ர-வ:—ஆமாங்க. மாட்டுத் தீவனத்துக்காக, கினியாப் புல் யானைப்புல் என்று ரெண்டு வகைப்புல்லு கொண்டாந்து நட்டாங்க. இந்த ஊர்கழிவு சலந்தான் அதுக்குப் பாயுதுங்க. வேரே ஒண்ணும் இல்லே அது சும்மா இம்மா ஒயரம் ஆள்மட்டத்துக்கு மேலே வருதுங்க.

1வது ர-வ:—அதுக்குப் பக்கத்துலே இருக்கிற மானவாரி நெலங்கள்ளே எல்லாம் அவுங்க காட்டினபடி கொரு கலப்பையால் வெதச்சுயிருக்கு அதாலே வெதச்சா காடும் சீக்கிரம் வெதப்பு ஆயிடுது. வெதயும் ஒத்தாப்புலே விழுந்து முளைக்குது.

பொ வ:—அதெமட்டும் சொல்லுவானேன். இந்த ஊரிலே அநேகமாய், போட்டிருக்கும் எல்லாப் பயிர்களுக்கும் சர்க்கார் விதைதான்.

த வ:—சாகுபடி சம்பந்தப் பட்டவரை, அவர்கள் குடிகளுக்கு எல்லா உதவிகளும் செய்கிறார்கள்போலும். நமது இந்தியாவுக்கு ராயல் கமிஷன் வந்ததும், அதன்முடிவாக ராஜாங்க விவசாய ஆராய்ச்சி சபை (Imperial council of Agricultural Research.) ஏற்படுத்தப்பட்டதும். அந்த சபைசெய்யும் அகில இந்தியா வேலைகளிலிருந்தும், இந்தியா கவர்ன்மெண்டார் விவசாயத்தில் மிகவும் ஊக்கம் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

2வது ர-வ:—என்னமோ சபையிண்ணு சொன்னீங்களே! எனக்கு இப்போ ஞாபகம் வருது. அந்த விவசாயதுரை இங்கே வந்திருந்தபொழுது, விவசாய சங்கங்கள் ஆரம்பிக்க வேணும்ணு சொல்லிட்டு போனாரு.

த வ:—அப்படியா! அப்போ அதைப்பற்றி யோஜிக்கலாம். இனிமேல் விவசாய இன்ஸ்பெக்டர் எப்பொழுது வருவார்?

பொ வ:—இன்னிக்கு காலமே வருவதாக கடுதாசு போட்டிருக்கிறாரு. அநேகமா இப்போ வரும்சமயந்தான்.

(டிமான்ஸ்ட்ரேடர் வருகிறார்)

அதோ வந்துட்டாங்க! இவுங்கதான் விவசாய இன்சுபெக்டர். [டிமான்ஸ்ட்ரேடர் அருகில் வருகிறார்.]

பொ வ.—(டிமான்ஸ்ட்ரேடரைப்பார்த்து) இவுங்கதான் பெரிய பண்ணை மிராசுதார்.

பொ வ:—(மிராசுதாரரைப்பார்த்து) இவுங்கதான் விவசாய இன்சுபெக்டர்.

டி வ:—I hope I have the honour of meeting Mr. Thanapala Mudaliar.

த வ:—I am very glad to meet yuu.

[இருவரும் கை குலுக்குகிறார்கள்.]

டி வ.—I have observed several times your name in the "Hindu" in connection with various associations. In all important functions your name was invariably included in the list of "Prominent among those present".

த வ:—Thank you for the compliments. I am now sick of city life and have come back to my lands once for all. My son all so has joined the Agricultural College Coimbatore.

டி வ:—These are really good news for me,

த வ:—உட்காருங்கள்! [இருவரும் உட்காருகிறார்கள்] தாங்கள்என்னுடைய கிராமத்திற்கு அடிக்கடி வந்து, கிராம முன்னேற்றத்திற்கு மிகவும் கஷ்டப்பட்டுவேலை செய்ததாகத் தெரிந்துகொண்டேன்.

டி வ:—அது என் கடமையே ஒழிய வேறில்லையே.

த வ:—தாங்கள் இதுவரை என் நிலங்களை பார்வையிட்டதில்லையே.

டி வ:—அதற்கென்ன எப்பொழுது வேண்டுமானாலும் பார்க்கலாம்.

த வ:—முருகா! நமது ஏஜண்டை அழைத்துவா.

(முருகன் போகிறான்.)

தங்கள் ஆபீஸர் இவிடம் வந்திருந்தபொழுது ஐக்ய விவசாய சங்கங்கள் ஆரம்பிப்பதைப்பற்றி சொன்னாராம் அதைப்பற்றி இப்பொழுது யோஜிக்கலாமா?

டி வ:—அவ்வித சங்கங்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் அவசியமே.

3வது ர-வ:—சாமி என்னமோ சங்கங்களெண்ணு சொல்லுரீங்களே. அது எங்களுக்கு ஒண்ணும் தெரியாது. நீங்க இருந்து அதே நடத்திக்கொடுக்கணும். ஆகையால் மத்த இனிசு பெக்டருமாதிரி, நீங்க இப்படி வந்துகிட்டும், போயி கிட்டும் இருந்தா முடியாது. எங்க ஊரோடே வந்து டுங்கோ. நல்ல ஊடு எல்லாம் இருக்கு ஒங்க தொரையே கேளுங்களேஞ்சாமி.

த வ:—ஏன் டிமான்ஸ்ட்ரேடர்வாள் உங்கள் Head-quarters-ஐ இந்த ஊருக்கு மாற்றிக்கொள்ள முடியாதோ?

டி வ:—அது அவ்வளவு சௌகரியப்படாது. நான் இந்த மாதிரி பல கிராமங்கள் போகவேண்டும். ஆகையால் இங்கே சங்கங்கள் ஆரம்பித்தால், வரும்பொழுதெல்லாம் சேர்ந்தார்ப்போல் **4, 5** நாள்கள் தாமதிக்கலாம்.

(முருகனும் ஏஜண்டும் வருகிறார்கள்.

ஏஜ வ:—(டிமான்ஸ்ட்ரேடரைப்பார்த்து) ஸ்வாமி! வாங்க.

த வ:—என்ன நாயுடுகாரு நம்முடைய நிலங்களை இந்த விவசாய இன்சுபெக்டருக்குக் காட்டி, ஏதாவது புதிய முறைகள் நிலத்தில் செய்து பார்த்தீர்களா?

ஏ வ:—அவுங்க நிலத்தை வந்துபாக்கல்லே. ஆனல் இந்த சர்க்கார் கரும்பு, நெல் எல்லாம் போட்டுப்பாத்து துங்க.

த வ.—எந்த நிலத்தில் போட்டுப் பார்த்தீர்கள்.

ஏ வ:—நம்ம குட்டயன் குளத்து பள்ளக்காட்டே, பள்ளன் சாம்பானுக்கு, குத்தகைக்கு விட்டுருக்கு, அவன் யாரண் டேயோயிருந்து இந்த சர்க்கார்நெல், கரும்பு தினுசு களை வாங்கிப்போட்டுப் பாத்தானும், அது நல்லாப் பிடிக்கலெயாம், அதிலிருந்து இவுங்க சொல்வழிகள் எல்லாம், நமக்கு சரிப்படாதுண்ணுட்டு, நான் ஒண் ணும் செய்ரதில்லே.

த வ:—ஆமாம்! அந்த பயிர்கள் ஏன் பிடிக்கவில்லை யென்று நேரில் போய்ப்பார்த்து அறிந்துகொண்டீரா?

ஏ வ:—அவன் சொன்னதுதான். நான் போய் பாக்கலே.

பொ வ:—அதுக்குக் காரணம் நான் சொல்ரேங்க. நெல்லும், கரும் பும் சருக்காரு விதைதான். ஆனல் கரும்பு நட்ட நிலம் ஒரு பள்ளக்காடு, தண்ணி கட்டும் வடிகால் வசதியே கிடையாது. நெல் நட்டபோது நாத்தும் முத்திப் போயி, பட்டமும் பிந்திப்போச்சு.

த வ:—இதிலிருந்து நீங்கள் எவ்வளவு பொறுப்போடு வேலை செய்கிறீர்கள் என்று தெரியவருகிறது. வேலைபார்த்தது போதும். போகலாம்.

ஏ வ:—(பணிவாய்) இல்லிங்கே இனிமேல்........

த வ:—மேல் பேசுவதில் பிரயோஜனமில்லை. என்முன் நிற்க வேண்டாம் (ஏஜண்டு தனியாகவந்து)

ஏ வ:—என்ன கோபம் அப்பா இது! ஆனல் இந்த கோபம் என்னை என்னபண்ணும்? நான் என்ன புத்தியில்லாதவனு, இந்தமாதிரி வரும்னு அப்பவே தெரியும். "எரியிர ஊட்டுலே புடிங்கினது ஆதாயம்" எங்கிரதுபோல், நான் ஏஜண்டாக இருந்த காலத்துக்குள் என் ஆயிசுக்கு வேண்டியதை சம்பாதித்துக்கொண்டேன். எனக்கு இனிமேல் இந்த வேலையே வேண்டாம். ஆனலும் இந்தப் பொன்னன் பயலுக்கு இவ்வளவு திமிரா என்னைக் காட்டிக்கொடுக்கிறன். வெளியிலே வரட்டும் இடுப்பே ஒடிச்சுப்புடுறேன்.

(கோபத்துடன் ஏஜண்டு விரைவாய் போகிறன்)

த வ:—இப்பொழுது சங்க விஷயத்தைப்பற்றி யோஜிக்கலாமே

டி வ:—Why not we form the Association now itself ?

த வ:—அப்படியே செய்வோம்.

டி வ:—(குடியானவர்களைப் பார்த்து) நாம் ஆரம்பிக்கும் சங்கத்திற்கு புதுப்பாளையம் கிராம ஐக்ய விவசாய சங்கம் என்று பெயர் வைத்து, அதற்கு கனம் தனபால முதலியாரையே அக்ராசனதிபதியாயிருக்கச் சொல்லலாமென்று நினைக்கிறேன்.

பொ வ:—ஆமாங்க! அவுங்கதான் இருக்கணுங்க.

த வ:—அப்போ! செக்ரெடரியாய் இந்த சங்கத்துக்குயாரை நேமிக்கலாம்.

மு வ:—நம்ம பொன்னனையே அதுக்கு சிக்கெட்டரியா வைக்கலாங்க. அவனுக்கு எழுதப்படிக்க எல்லாம் தெரியும்.

பொ வ:—அது எல்லாம் நமக்கு வேண்டாங்க. என் கொல்லைக் காடு வேலையே எனக்கு சரியாயிருக்கு. இதையெல்லாம் நான் என்னத்தை கண்டேனுங்க.

டி வ:—உங்கள் கொல்லை காட்டு வேலைக்கு இது ஒரு இடையூறாக இருக்காது. நான் இருந்து உங்களுக்கு வேண்டிய உதவி செய்கிறேன்.

பொ வ:—நீங்கள் சொல்ரப்போ பின்னெ இருக்கட்டுங்க.

த வ:—முருகா நோட்டு புத்தகம் ஒன்றும், பேனா, மைகூடும் எடுத்துக்கொண்டுவா.

[முருகன் போய் கொண்டுவருகிறான்.
தனபாலன் தீர்மானங்களை எழுதுகிறார்]

டி வ:—முதலில் இப்போது நடந்ததை எழுதுங்கள்.

[தனபாலன் எழுதுகிறான்]

டி வ:—இந்த ஊரில் இன்னும் 2 மாதத்தில் வரும் மாரியம்மன் கோவில் திருவிழாவின்போது ஒரு விவசாயக் கைத்தொழில் காக்ஷி ஒன்று நடத்தலாம்.

பொ வ:—அப்படி ஒரு தீர்மானம் போட்டு அந்த கண்காக்ஷிக்கு நமது விவசாய துரை அவர்களையும் வரும்படி அழைக்கவும் ஒரு தீர்மானம் போடுங்கள்.

தன வ.—நான் அதற்கு அபிவிருத்தி இலாகா மந்திரியையும்(Development Minister) வரவழைக்க ஏற்பாடு செய்கிறேன்

1வது ச-ர:—அப்படியில்லேங்க. அந்த மந்திரியும் வரட்டுங்க. ஆனால் நம்ப ஊருக்கு இதுதான் முதல் கண்காட்சி. நம்ம கிராமத்திலே இந்த மாதிரி யெல்லாம் நடந்ததற்கு, அம்மாதான் முக்கிய காரணம் அவுங்கள்தான் இந்த கண்காட்சியைத் திறந்து வைக்கணும்.

டி வ:—(தனபாலனைப்பார்த்து) That is a splendid suggestion I agree with him கண்காட்சியை சுலோசனை அம்மாள்தான் திறந்து வைக்கவேண்டும்.

த வ:—சரி! அவ்விதமே செய்வோம் நாம் எல்லோரும் இனிமேல் சங்கமுன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும். இன்றைக்கு இத்துடன் நிறுத்திக்கொள்ளுவோம் போவோமா? [டிமான்ஸ்ட்ரேடரைத் தவிர
எல்லோரும் போகிறார்கள்.]

டி வ:—நமது கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பல இலாகாக்களில் விவசாய டிபார்ட்மெண்ட் குடியானவர்களுக்காகவே தனியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. "Whosoever would make two ears of corn or two blades of grass grow upon a spot of ground where only one grew before, would deserve better of mankind and do more essential service to his country than the whole race of politicians put together" ஆகையால் ஒருவன் டிபார்ட்மெண்டாருடன் ஒத்து உழைத்தால் அவன் தேசமுன்னேற்றத்திற்கு பாடுபட்டவனாகிறான்.

பாட்டு. கல்யாணம் செய்து—என்ற மெட்டு

நாட்டிற் குழைத்தல் நலமே
நாமெல் லோருமே (நா)

நலந்தரும் பல தொழில் நாட்டிலிருந்தும்
நாடினேன் கைத் தொழில் நலமெனத்தெரிந்தும்
பலந்தரும் பயிர்களை பார்த்துமகிழ்ந்தும்
பாரிலுள்ளோர் எமை போற்றுதல் அறிந்தும் (நா)

2 தொழில் முறைக் கேற்கவே தோற்றமும் கொண்டு
தோதரிந்து செய் தால்பலன் உண்டு
எழில் மிகு மாந்தருக் கேற்றதாம் பண்டு
பயிர்த் தொழில் ஒன்றெனப் பகர்வதும் கண்டு (நா)

3 தாளுடன் பயிர்களைத் தாக்கிட நேரும்
தரணியில் சிலநோய் தலைகொண்டு சேரும்
நாளுமே நிபுணர்கள் நேரினில் கூறும்
நன்முறை தனைச்செய்தால் நாடாது தீரும் (நா)

(டிமான்ஸ்ட்ரேடர் போகிறார்.)

## களம் 3. அங்கம் 4.

இடம்:—விவசாயக் கைத்தொழில் காட்சி சாலை
காலம்:—மாலை 3 மணி [மண்டபம்
பாத்திரங்கள்:—தனபாலன், சுலோசனா, பொன்னன், முருகன், டிமான்ஸ்ட்ரேடர், டெபுடி டைரக்டர், குடியானவர்கள்.

[கண்காட்சி சாலை வாசல் திரையால் மூடப்பட்டிருக்கிறது. டெபுடிடைரக்டரைத் தவிற, பாக்கி எல்லோரும் நிற்கிறார்கள்.

தன வ:—(கைகடியாரத்தைப் பார்த்துவிட்டு, டிமான்ஸ்ட்ரேடரை நோக்கி) It is nearing three, and we are waiting for your Deputy Director.

டிமான் வ:—My officer told me that he will be here exactly at 3 p m, (hears the motor horn)
Ah! that is his Car. He will be here now.
[டெபுடி டைரக்டர் வருகிறார்.]

டிமான் வ:—(Demonstrator introduces) This is Mr, Thanapala Mudaliar
(To Thanapalan) Deputy Director
(இருவரும் கை குலுக்குகிறார்கள்.)

துரை வ:—I hope I have not kept you waiting

தன வ:—Oh! No! you are just in time............shall we proceed with the function.

துரை வ:—Yes. [துரை, டிமான்ஸ்ட்ரேடர், சுலோசனா, மூவருக்கும், பொன்னன் மாலை போடுகிறான்.]

பொ வ:—இந்த விவசாயக் கைத்தொழிற் காட்சி, இந்த ஊர் ஐக்கிய விவசாய சங்க ஆதரவின்கீழ் நடைபெறுகிறது. அந்த சங்கத்தின் சார்பாக இந்த கண்காட்சி சாலையைத் திறந்துவைக்கும்படி, ஸ்ரீமதி சுலோசனா அம்மாளை நான் கேட்டுக்கொள்கிறேன்

1வது ர-வ:—நான் அதை ஆமோதிக்கிறேன்.

சுலோ வ:—(முன் வந்து) :—

சீமான்களே, சீமாட்டிகளே,-இந்த கிராம விவசாயக்கைத் தொழில் காட்சியைத் திறந்துவைக்கும் கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக, இந்த சங்க மெம்பர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் என்மனமார்ந்த வந்தனத்தை அளிக்கிறேன். இந்தக்கிராமத்திலுள்ள ரயத்துக்களின் பொருளாதார நிலைமையும், விவசாய முறைகளும், முன்னேற்றமடைந்ததற்கு காரணம், நமது ஜில்லா விவசாய டெபுடி டைரக்டர் அவர்களும், தாலூகா டிமான்ஸ்ட்ரேடர் அவர்களும் சேர்ந்து எடுத்துக்கொண்ட முயற்சிகளே. "தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது" எல்லாத் தொழில்களிலும் விவசாயமே மேலானது. எந்த தேசத்திற்கும், அதற்கு முதற்பகுதி விவசாயிகளே என்று சொல்வதுதான் பொருத்தமாயிருக்கும். ஒருகாலத்தில் நமது இந்தியா தேசம், விவசாயத்தையே முதற் தொழிலாகக்கொண்டு மற்றைய நாடுகள் இந் நாட்டின் பெருமையையும் வளத்தையும் அறிந்து நம் முடன் வர்த்தகம் செய்வதில் போட்டிபோடும்படி அவ்வளவு கீர்த்தியுடன் இருந்தது. இப்பொழுது நமது தற்கால விவசாய நிலைமை, மேல்நாடுகளில் 19ம் நூற்ருண்டில் இருந்த நிலைமைக்கு ஒப்பிடும்படியான ஏழ்மையான ஸ்திதிக்கு வந்துவிட்டது. ஆனால் இதற்குக் காரணம், நம் தேசம் மாறவில்லை, நம் நாட்டு வளம் குறையவில்லை, நாம்தான் மாறிவிட்டோம். நம்முடைய புராதன வழக்கங்களை விட்டு விட்டு, நமது தேசத்திற்கு ஒவ்வாத மேல்நாட்டு நாகரீகங்களில்உள்ள ஆசையினுல், ஜீவிய ரீதியை ஜாஸ்திபண்ணிக்கொண்டு, கடனாளிகளாகவும் சோமபேரிகளாகவும் மாறிவிட்டோம் இந்த தேசத்திலோ, எல்லா சீதோஷ்ண ஸ்திதிகளும், தாவர உலோகங்களும், பட்சி ஜீவராசிகளும் காண்கிருேம் ஆகையால் தற்போது யந்திரசாலைத் தொழில்கள் மேன்மையடைந்து அதிக லாபத்தையும் வாழ்க்கைக்கு அதிக சுகத்தையும் கொடுத்தபோதிலும், தேசத்திற்கு விவசாயம் ஒரு ஆணி வேர் என்பதை எண்ணி, நாம் தற்கால நாகரீகங்களில் ஈடுபட்டு வீடுவாசல்களை விட்டு விட்டு பட்டணவாசம் போகாமல், மறுபடியும் விவசாயத்திற்கே மனதைத் திருப்பும்படி இங்கிருக்கும் மிராசுதார்களையும் இளைஞர்களையும் கேட்டுக்கொள்ளுகிறேன். மேல்நாடுகளில் நமது ஜில்லா போர்டுகளுக்கு ஒப்பாகிய

கவுண்டி கவுன்சில்ஸ் (county councils) என்ற சபைகளின் மூலமாகவே விவசாயிகள் முன்னேற்றமடைந்தார்கள். ஆகையால் நமது ஜில்லா போர்டுகளும் விவசாய அபிவிருத்தியில் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். கடைசியாக இங்கிருக்கும் மிராசுதார்களுக்கு நான் பணிவுடன் சொல்லவேண்டுவது என்னவென்றால் நாம் மறுபடியும் கிராம வாழ்க்கையை மேற்கொண்டு வேளாண்மையையும் உள்நாட்டுத் தொழில்களையும் (cottage industries) விருத்தி செய்து விவசாய டிபார்ட்மெண்டின்மேல் நம்பிக்கை வைத்து அவர்களுடன் ஒத்துழைத்து, நமது தேசமுன்னேற்றத்திற்கு ஒரு புதிய வழிகாட்டி, சிறப்புற்றோங்கும்படி செய்ய வேண்டும் என்பதே. நான் மறுபடியும் இந்த சங்க மெம்பர்களுக்கு எனக்குக் கொடுத்த கௌரவத்திற்காக வந்தனங்களை செலுத்தி இத்துடன் இந்தக் கண்காட்சி சாலையைத் திறந்துவைக்கிறேன்

[விவசாய டெபுடி டைரக்டர் கண்காட்சி பொருள்களைப்பற்றி விவரிக்கிறார்.]

துரை அ:—இங்கே வைத்திருக்கும் கண்காட்சி பொருள்களில் அநேகம் விவசாய டிபார்ட்மெண்டார் சொற்படி நவீன முறைகளில் உண்டாக்கிய பயிர்களும், பொருள்களுமே நிலத்திற்கேற்ற கரும்பு தினுசுகளும், காலத்திற்கேற்ற வயது குறைந்த நெல், சோளம் முதலிய விதை தினுசுகளும் இங்கே இருக்கின்றன. இந்தக்கரும்பு சுமார் 40 பொதிவரை சர்க்கரை காணும். 100-க்கு 15முதல் 20 திட்டம்வரை ஜாஸ்தி மாசூல் கொடுக்கக்கூடிய நெல் முதலிய தானியங்கள் இங்கே வைத்திருக்கப்பட்டிருக்கின்றன இங்கே இருக்கும் தேன், பட்டு நூல், பருத்தி முதலியவை சுலோசனா அம்மாளால் எடுக்கப்பட்டவை. இத்தகைய கைத்தொழில்கள் ஏழைகளுமல்லாமல் தனவந்தர் வீட்டுப்பெண்களும், கோஷாஸ்திரீகளும் செய்யக்கூடியவை. இந்தப் பட்டுநூலை எடுப்பதற்கு அந்தப் பூச்சிகளைக் கொல்லவேண்டாம். இந்த தேன் மிகவும் சுத்தமானது சாதாரணக் கடைத்தேனில் கருப்புகட்டி ஜலம் கலப்பிருக்கும். இது வீட்டிலிருக்கும் தேன் கூடுகளிலிருந்து எடுக்கப்பட்டதால் அந்த சந்தேகம் வேண்டாம். கைராட்டினத்தில் நூல் நூற்பதைப்பற்றி நான் அதிகம் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை.

இது நம் சோளத்திலிருந்து உண்டாகிய மால்ட்மாவு **1927—28ல் 30½** லட்சம் ரூபாய் பெருமான மால்ட் மாவு இந்தியாவில் இறக்குமதியாயிருக்கின்றன. இத்தகைய மால்ட் நம் வீட்டில் சோளத்திலிருந்து செய்து கொள்ளலாம். இது வாழைப்பழ மதுரம். இது பூவன் பழத்தை நறுக்கி வெயிலில் உலர்த்தி செய்யப்பட்டது. வாழைப்பழ சத்து கெடாமல் இதில் அப்படியே இருக்கிறது. இதை ஒரு வருஷம் வரை வைத்துக்கொள்ளலாம். ஆனால் காற்றுப்போகாத டப்பாக்களில் வைத்துக்கொள்ளவேண்டும். இந்த சங்கமெம்பர்களுக்கு வேண்டிய விதை, எரு, கலப்பை முதலியவைகளை இச்சங்கமே வருவித்துக்கொடுத்து விளைபொருள்களை விற்பதற்கும் இச்சங்கம் ஏற்பாடு செய்கிறது. இத்தகைய கொள்கைகளை மேற்கொண்டால் "குடி உயரக்கோனுயர்வான்" என்பதற்கேற்க நமக்கும் நம்மை ஆளும் அரசனுக்கும் க்ஷேமம் உண்டாகும்.

பொ வ:—எங்கள் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி இந்த கண்காக்ஷியை திறந்துவைக்க ஒப்புக்கொண்டதற்காக ஸ்ரீமதி சுலோசன அம்மாளுக்கும், இக்கண்காக்ஷிக்கு வந்திருந்து சிறப்பாக இதை நடத்திவைத்ததற்கு ஜில்லா கனம் டிப்டி டைரக்டர் அவர்களுக்கும், எங்கள் கிராம முன்னேற்றத்திற்கு முதற் காரணமாயிருந்த கனம் டிமான்ஸ்ட்ரேடர் அவர்களுக்கும், இந்தக் கண்காக்ஷிக்கு விஜயம் செய்து எங்கள் எல்லோரையும் கௌரவப்படுத்தியதற்காக இந்த சபையிலுள்ள எல்லா கனவான்களுக்கும் இந்த சங்கத்தின் சார்பாக என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கிறேன்.

[காட்சி முடிகிறது.]

சுபம்! சுபம்!! சுபம்!!!

Printed by Janopakara Press, Branch, Ariyalur—19-4-34.